மரம் நட விருப்பு

(கலாம் கனவுகளில் ஒன்று)

பணித்திறச் செம்மல்

பாபநாசம் குறள்பித்தன்

தமிழக அரசு விருது பெற்ற எழுத்தாளர்

மரம் நட விரும்பு

(கலாம் கனவுகளில் ஒன்று)

பணித்திறச் செம்மல்

பாபநாசம் குறள்பித்தன்

தமிழக அரசு விருது பெற்ற எழுத்தாளர்

சாதனா பப்ளிகேஷன்

5, பச்சையம்மன் கோவில் தெரு,

ஆர்.ஆர்.பாளையம், மீஞ்சூர்,

சென்னை - 601 203.

திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு.

நூல் விவரப்பட்டியல்

நூல் பெயர் : **மரம் நட விரும்பு**
(கலாம் கனவுகளில் ஒன்று)

ஆசிரியர் : பணித்திறச் செம்மல்
பாபநாசம் குறள்பித்தன்
தமிழக அரசு விருது பெற்ற எழுத்தாளர்

பதிப்பு : முதற்பதிப்பு 2015

பக்கம் : 108 பக்கங்கள்

அளவு : 1x8 க்ரௌன்

எழுத்து : 12 புள்ளிகள்

தாள் : 70 ஜி.எஸ்.எம்.

ஒளிஅச்சு : கே.ஆர்.எண்டர்பிரைசஸ், 9840646963

அச்சிட்டோர் : விசுவா பிரிண்ஸ், சென்னை-5

விலை : ரூ.120/-

வெளியீடு : **சாதனா பப்ளிக்கேஷன்**
5, பச்சையம்மன் கோவில் தெரு,
ஆர்.ஆர்.பாளையம், மீஞ்சூர்,
சென்னை - 601 203.
திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு.

நல்லாசிரியர் விருது பெற்ற

முனைவர் **கோ.பெரியண்ணன்,**

தலைவர் அனைத்து இந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம்,

சென்னை.

வாழ்த்துரை

இதில் இவரே முன்னோடி....

கவிஞரும், எழுத்தாளருமான திரு.பாபநாசம் குறள்பித்தன் எழுதியுள்ள நூல் 'மரம் நடவிரும்பு' என்ற நூல் 12 சிறுகதைகளைக் கொண்டது.

இக்கதைகள் ஒவ்வொன்றும் சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் மிகச் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது.

மரத்தின் பயன்பாடு, நாட்டு மக்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை கதைகள் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது பாராட்டுக்குரியது.

'மரம் நட்டு மாசினைப் போக்குவோம். மழையினைக் காணுவோம்' என்ற அப்துல்கலாம் அவர்களின் கனவை நடைமுறைக்கு ஏற்ப, ஆசிரியர் எழுதி இருக்கும் ஆற்றல் போற்றுதற்குரியது.

ஒவ்வொரு கதையும் இவரது புதிய சிந்தனையில் பொலிவோடும், பொருள் புதைந்து வலிவோடு பிறந்து இருக்கிறது.

பலரது உயிரைக் குடித்து வரும், பல குடும்பங்களை சிதைத்து சீரழித்து வரும், மதுவின் கொடுமையைப் பற்றி, 'தாலி' என்ற சிறுகதையில் ஆசிரியர் கூறிய கருத்தை மட்டும்

இங்கே நான் குறிப்பிடுகிறேன்...

அக்கதையில்.. ஒரு புளியமரம் குடிகாரன் ஒருவனை திருத்தி - மனித மிருகமாக இருந்த அவனை மனிதனாக்குகிறது என்பதை மிக அழகாக கற்பனை நயத்தோடு சொல்லி இருப்பது படிப்பவரை சிந்திக்க வைக்கும்.

இப்படி இந்நூலிலுள்ள எல்லாக்கதைகளும் மக்கள் மனதில் பதியக் கூடிய வகையில் எளிய நடையில் எழுதி இருக்கிறார்.

அமரர் அப்துல் கலாம் அவர்களைப் பற்றி, பலர் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள், சிலர் வாழ்க்கை வரலாறுகளை எழுதியிருக்கிறார்கள். வேறுசிலர், அவரின் சிந்தனைத் துளிகளையும், அவரின் வாழ்வில் நடந்த சம்பவங்களையும் தொகுத்திருக்கிறார்கள்.

ஆனால், அவர் கண்ட கனவுகளில் ஒன்றான மரம் நடுவதை யாருமே இவர் பார்த்த கோணத்தில் பார்க்கவில்லை.. கதைகளாக எழுதவில்லை.

பாபநாசம் குறள்பித்தன் மட்டுமே, இப்படியும் சிந்திக்க முடியும் - சிறப்பு செய்ய முடியும் - மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்ற சிந்தனைக்கு இவரே முன்னோடி என்பேன், நான்.

நான் சொல்வது உண்மை என்பதை இந்நூலைப் படிக்கும்போது நீங்களும் உணர்வீர்கள்.

பல நூல்களை எழுதி - பல விருதுகளைப் பெற்றுள்ள இவரைப் பாராட்டி, வாழ்த்தி மகிழ்கிறேன்....

அன்புடன்,

கோ.பெரியண்ணன்,

வனிதா பதிப்பகம்,

நானாத்தெரு, சென்னை - 17.

என்னுரையாக...

இனிய வணக்கம்.

இந்திய நாட்டின் முதல் பிரதமராக இருந்த நேரு அவர்கள், நாட்டை நேசித்ததோடு, குழந்தைகளையும் நேசித்தார், அவர்களோடு மகிழ்ச்சியாகப் பழகினார். அதனால்தான், அவர் பிறந்தநாளை 'குழந்தைகள் தின"மாகவே நாடு கொண்டாடி வருகிறது.

மதங்களைக் கடந்து; மாணவர்களைக் கவர்ந்து; அறிவியலை அறிந்து; ஆசைகளைத் துறந்து; ஆன்றோரை மதித்து, நாளும் பொழுதும் நாட்டையே நினைத்து வாழ்ந்தவர். இந்தியாவின் முதல் குடிமகனாகத் திகழ்ந்தவர்: அமரர் அப்துல்கலாம் அவர்கள்.

குழந்தைகளையும், இளைஞர்களையும் தம் வாழ்நாள் முழுதும் நேசித்தவர்...

அவர், குழந்தைகளை நிலத்தின் நித்திலங்களாகக் கருதினார்; நிகரற்றப் பூக்கள் என நினைத்தார்; தூய்மை மிக உருவங்கள் என துதித்தார்; அதனால்தான் அவர், இளைஞர் களோடு பேசிக்கொண்டு இருந்தபோது மறைந்தாரோ?

கலாம் அவர்கள், இளைஞர்கள் கையில்தான் எதிர்கால இந்தியாவின் உயர்வே இருக்கிறது' என்று நம்பினார், அதனால்தான், ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும், தம் உறவுகளோடு போய் இருந்து ஓய்வு கொள்ளாமல், தினம் தினம் பள்ளி, கல்லூரிகளில் குழந்தைகளோடும்; இளைஞர்களோடும் பழகி இருந்து வந்தார்.

2020 இல் இந்தியா வல்லரசு நாடாகும்; நாடாக வேண்டும் என்று கனவு கண்டார்; தாம் கண்ட கனவை எல்லோரையும் காண வைத்தார்.

அவர் கண்ட கனவுகள் ஒன்றா, இரண்டா? பல. கலாம் அவர்கள் சொன்னதுபோல் கனவு கண்டு கொண்டு இருப்பவர்கள் ஏராளம்.... ஏராளம்.... அதில் நானும் ஒருவன்...”

அதனால்தான், அவரின் கனவுகளில் ஒன்றை இந்நூல் வழியே என் எண்ணங்களை விதைகளாக விதைத்திருக்கிறேன். பதியன் போட்டு இருக்கிறேன்... இந்நூலிற்கு நல்லதொரு வாழ்த்துரையை நல்கிய நல்லாசிரியரும் - பல நூல்களுக்கு ஆசிரியரும் - அனைத்து இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவருமான திருமிகு: கோ.பெரியண்ணன் அவர்களுக்கும் - ஒளியச்சு அமைத்துக் கொடுத்த திருமிகு: ஓவியர் ராஜா அவர்களுக்கும், இந்த நூலில் உள்ள ஓவியங்களை வரைந்துள்ள தம்பி விவேகன் அவர்களுக்கும் சாதனா பதிப்பக உரிமையாளர் சங்கர் அவர்களுக்கும் என் வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எப்போதும்போல் என் எழுத்திற்கும், இதயத்திற்கும் துணை நிற்கின்ற என் உயிர்த்துணைவியார் நீலா கண்ணன் அவர்களுக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் இந்த இனிய வேளையில் கூறி மகிழ்கிறேன்.

நட்புடன்

பாபநாசம் குறள்பித்தன்

109/111, ஒற்றைவாடைத் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
அலைபேசி: 9790752371.

பொருளடக்கம்

1. தாத்தா வீட்டுக்குப் போனேன்... 9

2. வேப்பமர நிழலிலே.... 30

3. நீங்க நல்லா இருக்கணும்... 42

4. தாலி... 49

5. ஓரம்போ... ஓரம்போ... வண்டி வருது... 55

6. கன்றுகள், கன்றுகள் நட்டன... 62

7. பாதிப் பாதியாக... 68

8. நான் தண்ணி ஊத்துறேம்மா... 73

9. பிரசாதம் 78

10 'மா ' மனிதர்... 88

11. பூவரசமரமும் பூஞ்சிட்டுக் குருவிகளும்...! 95

12. மரம் நட விரும்பு 103

1

தாத்தா வீட்டுக்குப் போனேன்...

இளங்கீரனின் பெற்றோர் இருவருமே அரசு பணியில் இருந்தார்கள். தந்தை கல்லூரியில் பேராசிரியராகவும், தாய் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி வந்தார்கள்.

"நாளை பள்ளியிருக்கிறது என்பது நினைவு இருக்கிறதா இல்லையா?" என்று மகனைப் பார்த்துக் கேட்டார். தாய் தமிழ்மகள்.

"நினைவு இருக்கும்மா..." என்று தொலைக்காட்சியில் இருந்து முகத்தைத் திருப்பாமலேயே பதில் சொன்னான்.

"அப்படி என்றால், நாளை பள்ளிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய புத்தகங்களை எல்லாம் எடுத்து ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டியதுதானே!' காலையில் நீண்டநேரம் தூங்க வேண்டியது, அவசர அவசரமாக புறப்பட வேண்டியது..." என்று அலுத்துக் கொண்டார், தாய்.

"நாளைக்கு எப்படி பள்ளிக்கு போவது என்பதுதான் சிந்திக்கிறேன்" என்றான்.

"வழக்கம்போல் உன் அப்பா பைக்கில்தான் போகவேண்டும்."

"என்ன காமடியா?" என்றான்.

“நான் என்றும் நடப்பதைத்தானடா சொன்னேன்” என்றார், தாய்.

“அது இல்லை அம்மா.... என் தமிழாசிரியரை நினைத்தேன். அதனால்தான் அப்படிச் சொன்னேன்.!. என்றான்.

“ஏன், அவருக்கு என்னவாயிற்று?...” என்று கேட்டார், தாய்.

“உங்களுக்குப் பதட்டம் வேண்டாம்.... அவர் நன்றாகவே இருக்கிறார்.. அவர் சொன்னதை எப்படி செய்வது என்பது தான் என் கவலை எல்லாம். |என்றான்.

“அப்படி அவர் என்னதான் சொன்னார்?” என்று தாய் கேட்டுக் கொண்டு இருக்கும்போதே, நூலகத்திற்குச் சென்ற அவன் தந்தை, இளமாறன், வீட்டிற்குள் வந்து விட்டார்..

“என்னப்பா நான் கேட்டதற்கு பதில் சொல்லாமல் தொலைக்காட்சியிலேயே உன் கவனத்தைப் பதித்துக் கொண்டு இருந்தால் எப்படி?” கேட்டார், தாய்.

“தமிழாசிரியர், நீங்கள் விடுப்பில் செல்லும் இந்த பத்து நாளில், ஒவ்வொரு மாணவனும், பள்ளி விடுப்பு முடிந்து வரும்போது, அந்தப்பத்து நாள்களில், நீங்கள் பார்த்த மறக்கமுடியாத காட்சிகளையோ, உங்களைப் பாதித்த - மகிழ்வித்த நிகழ்வுகளையோ, நீங்கள் சந்தித்த மறக்க முடியாத மனிதர்களைப் பற்றியோ இரண்டு பக்க அளவிலே, அவைகளை கதைபோல் எழுதி வரவேண்டும்... என்று சொல்லியுள்ளாரே... அதுதான் எனக்குக் குழப்பமாக இருக்கிறது? நீ இங்கு இருந்து சென்று எட்டு நாள் எங்கு தங்கி இருந்தாய்? (

“என்னப்பா இதுகேள்வி...? தாத்தா வீட்டுக்குத்தானே அனுப்பிவச்சிங்க...”

“சரி.... நீ அங்கே நம்ம ஊரிலே ஓடும் குடமுருட்டி ஆற்றைப் பார்த்தாயா?” கேட்டார், தந்தை.

“அதில் மூழ்கி குளிக்கவே செய்தேன்..|

ஊரில் இருந்த குளத்தில் ஒரு பக்கம் மக்கள் குளிப்பதையும், மறுபக்கம் மாடுகள் குளிப்பாட்டுவதையும் வேறுபக்கத்தில் சலவைத் தொழிலாளிகள் துணிகள் துவைப்பதையும் பார்த்தாயா?" கேட்டார், தந்தை.

"எல்லாவற்றையும் பார்த்ததோடு, அந்தக்குளத்தில் காலை வேலையில் மலர்ந்து இருந்த தாமரைப் பூவையும், தாமரை இலைகளில் கொக்குகள் அமர்ந்து இருந்ததையும், குளத்தின் கரையோரம் இருந்த தாழம் மரத்தில் தாழம்பூ மஞ்சள் நிறத்தில் மலர்ந்து இருந்ததையும், ஒருவர் தலையில் முண்டாசோடு அமர்ந்து, தூண்டில் போட்டு மீன் பிடித்ததையும் பார்த்தேன்.... அதற்கு இப்போ என்னப்பா...?" கேட்டான் மகன், இளங்கீரன்.

"அடே... எங்கள் செல்வமே... நீ எதிர் காலத்தில் கவிஞனாகவோ, எழுத்தாளனாகவோ வருகின்ற தகுதி-ஆற்றல்-சிந்தனை உன்னிடம் இருக்கிறதடா... இப்போதே என் வாழ்த்துக்கள்" என்றார், தந்தை...

"அம்மா... அப்பாவைப் பாருங்கள், கிண்டல் செய்றாங்க..."

"இல்லையடா மகனே... நீ பார்த்ததை மிக அழகாக கூறியதைக் கேட்ட எனக்கும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது" என்றார், தாய்.

"போதும் உங்கள் வஞ்சப்புகழ்ச்சி..." என்றான், கீரன்.

"நீ எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்... நான் சொன்னது உண்மை... சரி... வேறு என்னென்ன பார்த்தாய்?" கேட்டார், தந்தை.

"தாத்தாவைப் பார்த்தேன்... அவரோடு நீண்ட நேரம் பேசிக்கொண்டு இருந்தேன். தாத்தா வளர்த்து வரும்

ஆட்டுக்குட்டியோடு விளையாடினேன். வெள்ளரிக்கா சாப்பிட்டேன்.. இளநீர் குடித்தேன். தாத்தாவின் குணம். அவரது அன்பு கலந்த பேச்சு, அவரது கருணை உள்ளம்... இன்னும் பல நல்லகுணங்களையும் செயல்களையும் அவரிடம் கண்டேன்..." என்றான், இளங்கீரன்.

"நீ இனி உன் ஆசிரியருக்கு பயப்படத்தேவை இல்லை.... இப்போது நீ உன் அம்மாவிடமும், என்னிடமும் சொன்னக் கருத்துக்களை எல்லாம் அப்படியே எழுதி, ஒரு பத்திரிகைக்கு அனுப்பினால் பிரசுரமாகும். அவ்வளவு அருமையாக இருக்கிறது..." என்றார், தந்தை.

"அம்மா... அப்பா மீண்டும் கிண்டல் செய்கிறார்..." என்றான். இளங்கீரன்.

"இப்போதும் சொல்கிறேன்... நான் சொல்வது உண்மை. சரி...கடைசியாக ஒன்றைக் கேட்கிறேன்.... இந்த உன் ஊர் பயணத்தில், நீ இங்கு வந்தும், உன்னால் மறக்க முடியாத காட்சிகள்.... நிகழ்ச்சிகள் என்ன, அதை மட்டும் சொல்..."

"நான் தாத்தாவோடு இருந்ததும், அவர் செய்த செயல்பாடுகளையும், அவர் வளர்த்துவரும் ஆட்டுக்குட்டியோடு விளையாடியதும் என்னால் மறக்கவே முடியாது அப்பா..." என்றான்.

"அருமை... நான் நினைத்த இடத்திற்கு வந்து விட்டாய்.... இதோ பார்... உன் தாத்தாவோடு பழகியது, ஆட்டுக்குட்டியோடு விளையாடியது.... இதை மட்டுமே மையமாக வைத்து எழுது அருமையாக இருக்கும்...

நீ எழுதும் எழுத்தில் உண்மை மட்டும் இருந்தால்போதும். அது உன்னால் முடியும்.... முயற்சி செய்.. முயற்சி செய்.. என்று சொல்லிக் கொண்டே தன் அறைக்குள்போய் விட்டார், தந்தை.

"அம்மா.... அப்பா சொல்வது சரியாக வருமா:" கேட்டான்.

"கீரா, உன்னால் உறுதியாக எழுத முடியும்...

நம்பிக்கையோடு செயல்படு.... சரி, உனக்கு இரவு இட்லி வேணுமா, தோசை வேணுமா?" கேட்டார், தாய்...

"எனக்கு கதைவேணும்..."

சிரித்தபடியே..." அப்படின்னா... அறைக்குப்போயி சிந்தி.... கிடைக்கும்..." என்று கூறிப்போனார், தாய்.

சிந்தித்தபடியே அறைக்குள் சென்ற இளங்கீரன் பேப்பரை எடுத்து பேடில் வைத்தவன், மேஜை மேல் இருந்த பேனாவை எடுத்து வந்து உட்கார்ந்தான்...

தாத்தாவின் ஊருக்கு சென்றதையும், அங்கு நடந்தவைகளையும்... மீண்டும் மீண்டும் நினைவில் கொண்டு வந்தான், இளங்கீரன்.

சென்னையிலிருந்து என்னை அழைத்து வந்த பெரியப்பா, தாத்தா வீட்டில் விட்டு விட்டு அவர்கள் வீட்டிற்குப் போய்விட்டார்.

தாத்தா.... தாத்தா.... என்று அழைத்தேன்.

உள்ளே இருந்து மாமாவும், அத்தையும் வந்தார்கள்...

என்னைக் கண்டதும், "மாப்பிள்ளை.... வா...வா.... எங்கே பெரியப்பா?" கேட்டார்.

என்னை விட்டுட்டு அவுங்க வீட்டுக்குப் போய்ட்டாங்க...

"அம்மா எனக்கு நைட்டே போன் பண்ணியிருந்தாங்க..."
"தாத்தா எங்கே மாமா? கேட்டேன்.

"தாத்தா இருக்காங்க... நீ சட்டை எல்லாம் மாத்திட்டு, குளிச்சிட்டுவா... இட்லி சாப்பிடலாம்...." என்றார், அத்தை.

"ஆமாம்... ஆமாம்.... நீ போ" என்றார், மாமாவும்.

அவர்கள் சொன்னதுபோல் செய்து முடித்து வந்தேன்....

தாத்தாவோட சாப்பிடுறேன் அத்தை, என்றேன்.

"அவுங்க வர நேரமாகும்.... நீ முதல்ல சாப்பிடு..." அதற்குமேல் எதுவும் பேசாமல், அத்தை வைத்த இட்லியை சாப்பிட்டு முடித்தேன். வெளியில் வந்தேன்.

மாமாவின் இரண்டு வயது குழந்தைக்காக, அம்மா என்னிடம் வாங்கிக் கொடுத்து அனுப்பிய ரிமோட் காரையும், இரயிலையும் சூட்கேஸில் இருந்து எடுத்து வந்து, குழந்தையிடம் இயக்கிக்காட்டி, அவனோடு விளையாடிக் கொண்டு இருந்தேன்.

மாமா, தாத்தா எப்ப வருவாங்க? கேட்டேன்.

"தாத்தா இங்கே வரமாட்டாங்க. நாமதான் அவுங்க இருக்கிற இடத்துக்குப் போகணும்... வா... போகலாம்..." என்று அழைத்ததும் மகிழ்ச்சியோடு கிளம்பினேன்.

தாத்தாவை எனக்கு ரொம்ப பிடிக்கும்.... தாத்தாவுக்கும் அப்படித்தான்...

மாமா, என்னை பைக்கில் அழைத்துக்கொண்டு சென்றார். ஐந்து நிமிட ஓட்டத்திற்குப்பின் பைக் ஒரு பெரிய தோப்பிற்குள் நின்றது.

"இறங்கு மாப்பிள்ளை...." என்றார், மாமா.

வண்டியில் இருந்து இறங்கிய என்னிடம் மாமா சொன்னர் ,,,

"அதோ பார்... தோப்புக்கு நடுவே இருக்கே ஒரு குடிசை அங்கேதான் உன் தாத்தா இருக்காங்க... போய் பாரு..." என்று தோப்புக் கேட்டைத் திறந்து விட்டார்.

சரி மாமா...

"மதியம் வந்து சாப்பிட அழைச்சிகிட்டுப் போறேன். இங்கேயே இரு" என்றார்.

சரி என்று கூறிவிட்டு வேகமாக குடிசையை நோக்கி

ஓடினேன், குடிசை கதவு மூடியிருந்தது...

தாத்தாவின் குரல் மட்டும் விநாயகரைப் பற்றிய பாடலோடு வெளியில் வந்து கொண்டு இருந்தது.

தாத்தா, சாமி கும்பிட்டுக் கொண்டு இருக்கிறார்... இப்போது நாம் இடையூறு செய்யக்கூடாது... என்ற எண்ணத்தில், குடிசைக்கு முன் கிடந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து, தோட்டத்தைப் பார்த்தேன்.

நிறைய மரங்கள் ஆங்காங்கே நின்று கொண்டு இருந்தன. சில கொடிகள் தரையில் படுத்துக் கிடந்தன. இடை இடையே பல செடிகளும் இருந்தன.

சென்னையில், பெரிய பெரிய கட்டடங்களையும், பொழுதுக்கும் இறைச்சலோடு சென்று கொண்டு இருக்கும் வாகனங்களையும், எங்கே போகிறோம் என்று கூட தெரியாமல் சென்று கொண்டு இருக்கும் மனிதர்களையும் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன எனக்கு, பச்சைபசேல் என்று இருக்கும் மரங்களையும், செடி, கொடிகளையும், பார்த்த எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அதே நேரம் கதவு திறக்கப்பட்டது.... தாத்தா நெற்றியிலும், மார்பிலும் திருநீரோடும் குங்குமத்தோடும் வெளிப்பட்டார். அவர் பின்னே ஒரு ஆட்டுக்குட்டியும் வந்தது.

தாத்தா என்று அழைத்தபடியே ஓடிப்போய் அவரைக் கட்டிக்கொள்ளவே என்னைப் பார்த்ததும், தாத்தாவுக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. அப்படியே என்னை அணைத்துக்கொண்டு, "எப்படாக் கண்ணு வந்தே...? அம்மா வந்திருக்காங்களா?" என்று கேட்டார்.

இல்லை தாத்தா, நான் மட்டும்தான் பெரியப்பாவோடு

வந்தேன்....

"அப்படியா... வா.... இங்கே உட்கார்" கட்டிலில் என்னை அமர வைத்து விட்டு தானும் அமர்ந்து கொண்டார்.

எங்கள் இருவருக்கும் இடையே ஆட்டுக்குட்டியும் ஏறி நின்று கொண்டது.

"சாப்பிட்டியா பேராண்டி...?" கேட்டார்.

இட்லி சாப்பிட்டேன் தாத்தா... நீங்கள் சாப்பிட்டிங்களா, தாத்தா?

"இனிமேதான் சாப்பிடணும்.... நீங்க எப்ப வந்திங்க?"

காலையிலே எட்டுமணிக்கு, தாத்தா...

"உங்களை யார் கொண்டு வந்து இங்கே விட்டது...?"

மாமா தாத்தா... நீங்க ஏன் இங்கே இருக்கீங்க? வீட்டுக்கு வர மாட்டீங்களா தாத்தா? கேட்டேன்.

உன் மாமாவுக்கும், அத்தைக்கும் நான் வீட்டிலே இருப்பது பிடிக்கவில்லை. அதனால், நான் இங்கே வந்திருக்கிறேன்... என்று இந்தப் பிஞ்சுவிடம் எப்படி சொல்வது? அப்படி சொன்னால், குழந்தை அவர்களைப் பற்றி என்ன நினைப்பான்? என்று சிந்தித்தவர், ஏதும் சொல்லாமல் இருந்தார்.

தாத்தா பதில் ஏதும் சொல்லாமல் இருந்ததால், ஏன் தாத்தா நீங்க வீட்டுக்கு வரவில்லை? என்று மீண்டும் கேட்டேன்.

"அது ஒண்ணும் இல்லப்பா.... அங்கே இருக்கிறதைவிட இங்கே இருக்கிறதுக்கு, எனக்கு ரொம்ப பிடிக்குது...." அவ்வளவுதான்...

இதோ பாரு, மாமரம், அதோ பாரு, கொய்யாமரம், அங்கே பார் அவரைக்கொடி... பார்க்க எவ்வளவு அழகா, கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கு.. அதான் இங்கேயே இருக்கேன்..." என்றார்.

ஆமாம் தாத்தா, நானும் வந்ததும் பார்த்தேன். மிகவும் அழகாக இருக்கு... நல்லா காற்றும் வருது... என்றேன்.

“இதுபோல மரம், செடி, கொடிகளோட இருந்தா மனசும் நல்லா இருக்கும்... உடலும் நல்லா இருக்கும்... அது சரி, நீங்க எந்த வகுப்பு படிக்கிறீங்க...?” கேட்டார், தாத்தா.

எய்த்து ஸ்டேன்டேடு, தாத்தா

“எட்டாவதா? எத்தனை நாள் லீவு?” கேட்டார்.

டென்டேஸ் தாத்தா.

“பத்து நாளா?”

பத்து நாளா என்று கேட்ட தாத்தாவிடம் உங்களுக்கு இங்கிலிஸ் தெரியுமா? என்று சிரித்தபடியே கேட்டேன்.

தாத்தா மிடுக்கோடு மீசையை முறுக்கிய படியே...

“அந்தக் காலத்தில் நான்தான் நம்ம ஊரிலேயே அதிகம் படிச்சவனாக்கும்... எட்டாவது” என்று பெருமையுடன் தாத்தா சொன்னதும்....

அப்படியா தாத்தா... என்று சிரித்தேன்.

“அம்மாவும், அப்பாவும் உன்னோடு லீவுல வந்து இருக்கலாமே, ஏன் வர்லே?” கேட்டார், தாத்தா.

இரண்டு பேருமே கல்வித்துறையிலே இருக்கிறதாலே, பேப்பர் எல்லாம் திருத்தனுமே, அதனாலதான் வர்ல தாத்தா... என்றேன்.

“ரெண்டு பேரும் நல்லா இருக்காங்களா?” கேட்டார், தாத்தா.

நல்லா இருக்காங்க, தாத்தா.



“நீங்க எல்லாம் நல்லா இருக்கணுங்கிறதுக்காகத்தான் இப்பக் கூட, நான் சர்ப்ப விநாயகரை வேண்டிக்கிட்டேன்” என்றார், தாத்தா. தாத்தாவுக்கும் எனக்கும் இடையில் நின்று கொண்டு இருந்த ஆட்டுக்குட்டியை தடவிய படியே, தாத்தா இந்த ஆட்டுக்குட்டி மான் குட்டியைப்போல இருக்கு என்றேன்.

“ஆமாம் பேராண்டி... உடல் முழுதும் செம்மண் கலராகவும், அதன் இடை இடையே வெள்ளை நிறத்தில் புள்ளிகளும் இருக்கிறதாலே, பலபேர் உன்னைப்போல் நினைக்கிறாங்க... சிலபேர் என்கிட்டே கேட்கவும் செய்து இருக்காங்க...” என்று கூறிய தாத்தா, அதன் கழுத்தைத் தடவிக் கொடுக்க ஏழு, எட்டு மாத குட்டியான அது அவர் மடியில் படுத்துக் கொண்டது.

அதைப் பார்த்த நான் சிரித்தபடியே மென்மையான அதன் முடி மீது கை வைத்து அன்போடு தடவிவிட்டுக் கொண்டே, தாத்தா நீங்க இன்னும் சாப்பிடுலியே என்று கேட்டேன்.

“ஆமால்ல... உன்னைப் பார்த்ததும் அதை மறந்தே போனேன். முதல்ல தனத்தைச் சாப்பிட வைப்போம்...” என்று எழுந்தார். தாத்தா இது பாட்டி பேருதானே? கேட்டேன், நான்.

“ஆமாம் பேராண்டி.... அதைத்தான் இந்த செல்லத்துக்கும் வச்சி இருக்கேன்..” என்றார், தாத்தா.

பாட்டி மேலே தாத்தாவுக்குதான் எவ்வளவு பாசம்...

மனதுக்குள்ளேயே மகிழ்ந்து கொண்டேன்.

ஆட்டுக்குட்டியை மடியில் இருந்து கீழே இறக்கிவிட்ட தாத்தா, எதிரே இருந்த தொறட்டையும், சிறிய

கூடையையும், கீற்றில் செருகி இருந்த சிறிய அரிவாளையும் எடுத்துக் கொண்டு "வா பேராண்டி..." என்று சொல்லி நடந்தார்.

அவர் முன்னே, ஆட்டுக்குட்டி துள்ளி குதித்து ஓடிக் கொண்டு இருந்தது. நானும், தாத்தாவின் பின்னே அங்கிருந்த மரங்களையும், செடிகொடிகளையும் பார்த்துக் கொண்டே நடந்தேன்.

தாத்தா தன் கையில் வைத்திருந்த தொறட்டால் ஒரு மாங்கிளையை வளைத்தார்.. அந்த வேளையில் ஆட்டுக்குட்டி அவர் மீது தாவி தன் முன்னங்கால் இரண்டையும் வைத்துக் கொண்டு நின்றது.

தான் வளைத்த கிளையில் இருந்து பத்து மாவிளைகளை மட்டும் பறித்துக் கூடையில் போட்டதும், ஆட்டுக்குட்டி தாத்தா மீது இருந்த கால்களை எடுத்து விட்டு, ஆவலோடு ஒரு இலையை எடுத்துத் தின்னத் தொடங்கியதும், தாத்தா கூடையை எடுத்துக்கொண்டு ஓதிய மரத்தின் கீழ்போய் நின்றார்.

அந்த மரத்தின் கிளை ஒன்றை வளைத்து, அதில் இருந்து இருபது இலைகளையும் பறித்துக் கூடையில் போட, குட்டி மாவிலையைத் தின்ற நிலையில், ஓதியன் இலையில் இருந்து இரண்டு இலைகளை எடுத்துத் தின்னத் தொடங்கியது.

"பேராண்டி... இந்தக் கூடையை எடுத்துக்கிட்டு நீ வா...." என்று சொல்லி நடந்தார்.

தாத்தாவின் செயல்கள் புதுமையாகப்பட்டது எனக்கு.

நடந்த தாத்தா நின்றார்... அந்த இடத்தில் தரையில் செழித்து வளர்ந்து, இருந்த அருகம் புற்களை, தான் இடுப்பில் செருகி வைத்திருந்த சிறிய அரிவாளால் ஒரு பிடி அறுத்தார், நான் வைத்து இருந்த கூடையில் அதைப்போட்டார்...

ஓதியன் இலையைத் தின்று முடித்திருந்த ஆட்டுக்குட்டி.

அருகம்புல்லை ஒரு வாய் எடுத்து மென்று தின்னத் தொடங்க...

“கூடையை அப்படியே வச்சிட்டு என்னோடு வா பேராண்டி...” என்ற தாத்தா, செல்லம் இங்கேயே நீ இரு...” என்று சொன்னதும். அவரை அன்னாந்து பார்த்தபடியே புல்லை மென்று கொண்டு நின்று விட்டது, ஆட்டுக்குட்டி.

மஞ்சள் பூவோடும், வட்ட வட்ட இலைகளோடும் கீழே தரையில் படர்ந்து கிடந்த கொடியை விலக்கி விலக்கிப் பார்த்தார். இடுப்பில் செருகி வைத்திருந்த அரிவாளால் மூன்று வெள்ளரிப் பிஞ்சுகளை அறுத்து என்னிடம் கொடுத்தார், தாத்தா.

தாத்தா, வெள்ளரிக்காய் அப்பா வாங்கி வருவாங்க... அதன் கொடியை இன்றுதான் தாத்தா பார்க்கிறேன்... என்றேன்.

“அப்படியா பேரான்டி..” என்ற படியே நடந்து சென்றவர் ஒரு கொய்யாமரத்தின் கீழே நின்றார்.

மரத்தில் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்த கொய்யா மரத்தையே நீண்ட நேரம் சுற்றி சுற்றி வந்த தாத்தா பின் ஒரு கிளையை, கையில் வைத்திருந்த தொறட்டால் வளைத்து, பழுக்கும் நிலையில் இருந்த மூன்று காய்களைப் பறித்து என்னிடம் கொடுத்தார்.

அவைகளை வாங்கி என்பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டேன்.

பின் தாத்தா அங்கிருந்து நடந்தார். நானும் அவர் பின்னே நடந்தேன்.

ஒரு வெண்டைச் செடியின் முன்னே நின்றவர், அதில் இருந்து இரண்டு வெண்டைக்காய்களை மெல்ல கத்தியால் அறுத்து தன் கையில் வைத்தபடியே குடிசையை நோக்கி நடந்தவர், இடையில் இருந்த கூடையை எடுத்துக்

கொண்டார்.

ஆட்டுக்குட்டி எங்களுக்கு முன்னே துள்ளிக்குதித்து ஓடிப்போய் கட்டிலில் ஏறி நின்று கொண்டு எங்களைப் பார்த்தது...

தாத்தா, கூடையை கீழே வைத்ததும், கட்டிலிலிருந்து கீழே குதித்து கூடையில் இருந்த இலைகளைத் தின்னத் தொடங்கியது.

ஆட்டுக்குட்டியின் செயல்களைப் பார்த்த எனக்கு வியப்பாக இருந்தது.

குடிசைக்குள் நுழைந்த தாத்தா ஒரு பாத்திரத்தில் சிறிது நீரோடும், மூன்று வாழைப்பழங்களோடும் வெளியே வந்தவர் -

கட்டிலில் அமர்ந்து இருந்த என்னிடம் இதுல வெள்ளரிப் பிஞ்சுகளையும், கொய்யாவையும் போடு என்றவர், தன் கையில் இருந்த வெண்டைக் காயையும் கழுவினார்.

காய்களைக் கழுவியத் தண்ணீரை பக்கத்தில் இருந்த மல்லிகைச் செடியின் அடியில் ஊற்றினார்.

தாத்தா நினைத்து இருந்தால், அந்த அரைலிட்டர் தண்ணீரை உட்கார்ந்து இருந்த இடத்தில் இருந்தே விசிறி கீழே ஊற்றி இருக்க முடியும். ஆனால், தாத்தா அப்படி செய்யவில்லை...

பலபேர் தண்ணீர்தானே என்று எவ்வளவு பேர்கள் அலட்சியமாக வீணடிக்கும் இந்த காலத்தில், கிராமத்தில் இருக்கும் தாத்தாவின் குணம்... சிக்கனம், பொறுப்புணர்ச்சி எனக்குள் வியப்பைத் தந்தது.

தாத்தா மணி ஆயிருச்சே இன்னும் நீங்கள் டிபன் சாப்பிடுலேயே... என்றேன்.

தாத்தா மெல்ல சிரித்தபடியே, "அதெல்லாம் உங்களைப்போல் உள்ளவர்கள் சாப்பிடுவது" என்று சொல்லியபடியே, என்னிடம் ஒரு வெள்ளரிப்பிஞ்சை கொடுத்து விட்டு ஒன்றை எடுத்து அவர் கடித்து, நன்கு

மென்று சாப்பிடத்தொடங்கியபடியே..." இதுதான் பேரான்டி எனக்கு டிபன்..." என்று சொன்னதும் அசந்துபோய் விட்டேன்...

"என்ன பேராண்டி வெள்ளரிக்காய்க்கு தொட்டுக்க உனக்கு மிளகுத்தூளும், உப்பும் வேணுமா?" என்று கேட்டார்.

வேணாம் தாத்தா.... இது நன்றாகத்தான் இருக்கிறது.. என்று வெள்ளரிப் பிஞ்சை நன்றாக மென்று சாப்பிட்டேன்.

அடுத்து வெண்டைக்காய் ஒன்றை எடுத்து கையில் வைத்துக் கொண்டு, "இதைச் சாப்பிடுகிறாயா? கேட்டார்.

நீங்க சாப்பிடுங்க தாத்தா... இது கொழ கொழன்னு இருக்கும்.... நான் கொய்யாவை எடுத்துக்கிறேன்...

தாத்தா வெண்டைக்காயைச் சாப்பிட்டு கொய்யாவை எடுத்து நன்றாக மென்று சாப்பிட்டு விட்டு...

"காலை உணவாக காய், பழங்களை சாப்பிட்டாலே போதுமான சக்தி நம் உடலுக்குக் கிடைத்துவிடும். அதனால் தான் பேராண்டி இப்படி சாப்பிடுகிறேன் என்றவர்,

"இந்த பழம் சாப்பிடு..." என்று ஒரு வாழைப் பழைத்தைக் கொடுத்தார்.

தாத்தா இது ஏது?... கேட்டேன் தாத்தாவிடம்.

"உள்ளே பழுக்க வச்சியிருக்கேன்..."

இந்தப் பழம் நல்லா இருக்கு... என்ன பழம் தாத்தா இது...?

"இதை இங்கே பேயன் பழமுன்னு சொல்லுவாங்க..."

இந்தப் பழத்தை இப்பதான் முதன் முதலாகச்

சாப்பிடுறேன்... அப்பா, பச்ச வாழைப்பழம், புவன் பழம், மஞ்சள் பழமும் தான் வாங்கி வருவாங்க.... எப்போதாவது ரஸ்தாளிப் பழமும் நேந்திரப் பழமும் வாங்கி வருவாங்க... ரஸ்தாளி பழம் எனக்கு ரொம்ப பிடிக்கும் தாத்தா...

"நம்ம தோட்டத்துல அது இருக்கு.... நீ ஊருக்குப் போகும்போது பழுக்கவச்சிதர்றேன்...

சரி தாத்தா... மத்தியானம் என்ன சாப்பிடுவீங்க?

"நீ வரும்போது மெயின்ரோடு பக்கமா ஒரு டீக்கடை இருக்குள்ள, அங்கே இருந்து மத்தியானம் தயிர் சோறும், எலுமிச்சம் சோறும் கொண்டு வந்து கொடுப்பாங்க..."

ராத்திரிக்கு ரெண்டு தோசையோ, இல்ல ரெண்டு சப்பாத்தியோ கொண்டு வந்து கொடுப்பாங்க...

தாத்தா, அத்தை சோறு கொடுத்து அனுப்ப மாட்டாங்களா...?

"உன் மாமாவும், அத்தையும் என்னை சுமையாக நினைத்ததால்தானே நான் தனியே இங்கே வந்து இருக்கிறேன் என்று சொல்லி இந்தப் பிஞ்சு மனதில் பகைமையை ஏன் விதைக்க வேண்டும்? வேண்டாம். உண்மை நிலையை கூற வேண்டாம்..." என்று சிந்தித்துக் கொண்டு இருந்தார்.

என்ன தாத்தா, அத்தை செய்ற சோறு உங்களுக்குப் பிடிக்கலியா?

"பிடிக்கும்... உங்க மாமாவும், அத்தையும் வேலைக்குப் போறவங்க.. அவுங்களுக்கு ஏன் தொந்தரவு கொடுக்கனுமுன்னுதான்... வேற ஒண்ணுமில்ல பேராண்டி... அது சரி அத்தையும், மாமாவும் உன்கிட்ட நல்லா பேசினாங்களா?"

ஓ, நல்லா பேசினாங்க தாத்தா.... மத்தியானத்துக்கு உனக்கு என்ன சாப்பாடு செய்யனுமுன்னு கேட்டாங்க அத்தை... நீங்க என்ன சாப்பிடுறீங்களோ அதையே நானும் சாப்பிடுறேன்னு சொல்லிட்டேன்...

அம்மா, மாமாவோட குழந்தைக்கு விளையாட ரிமோட் காரும், இரயிலும் வாங்கித் தந்தாங்க. அதை வச்சி குமணனோடு இங்கே வர்ற வரைக்கும் விளையாடிட்டுதான் வர்றேன்.... தாத்தா இந்தத் தோட்டத்துல என்னென்ன மரங்கள் இருக்கு? கேட்டேன்.

"தேக்கு மரம்... தென்னை மரம், பனை மரம், பப்பாளி மரம், புளியமரம், கொய்யா மரம், பலாமரம், எலுமிச்சமரம், நார்த்த மரம் இப்படி பல மரங்கள் இருக்கு..

செடிகளில் கத்திரி, வெண்டை, கொத்தவரை இப்படி பல. கொடிவகைகளில், அவரை, பரங்கி, பூசணி, வெள்ளரி, தர்பூசணின்னு பல இருக்கு.."

இதுல காய்க்கிறதை எல்லாம் மாமா வந்து பறிச்சி கிட்டுப் போவாங்களா...?

"இல்லடா கண்ணு, கும்பகோணத்திலே இருந்து மார்க்கெட் ஆளுங்க வருவாங்க... அவுங்க கிட்டேதான் நான் பறிச்சி வித்துடுவேன்..."

அப்படியா தாத்தா

இருவரும் பேசிக்கொண்டு இருக்கும்போது தனக்குத்தேவையான அளவு இரையைத் தின்று விட்டு, கட்டிலில் ஏறி தாத்தா பக்கத்தில் படுத்துக் கொண்டது. ஆட்டுக்குட்டி. அதைத் தடவிக் கொண்டிருந்த தாத்தாவிடம்.

"நம்ம தெருவிலே இருக்கிறவங்க எல்லாம் அவுங்க வளர்க்கிற ஆட்டுக்கு மரத்திலே இருந்து கிளை கிளையா. வெட்டி வந்து கயிற்றிலே கட்டி விடுவாங்க, அதை ஆடுங்க திங்கிறதை போன லீவுக்குவந்து இருந்த போதுகூட நான் பார்த்து இருக்கிறேன்...

நீங்க ஏன் தாத்தா மரத்துல இருந்து கிளைகளை

வளைச்சி... அதிலே இருந்து இலைகளை மட்டும் பறிச்சி ஆட்டுக் குட்டிக்குக் கொடுக்கிறீங்க...? கேட்டேன்.

"அதுவாடாக் கண்ணு... அப்படி நான் பறிக்காம அவுங்கள் போல தினமும் ஒரு கிளையை நானும் வெட்டி இதுக்குப் போட்டேன்னா ஒரு மாதத்துல அந்த மரமே மொட்டையாகிப் போயிடும்... அதனாலதான்.. நான் சிரமம் பார்க்காம ஒவ்வொரு இலையா பறிச்சிப்போடுறேன்... மரம் இருந்தாதானே மழை வரும், நாடு செழிக்கும். அதனாலதான் என்னால் முடிந்த அளவுக்கு மரக்கன்றுகளையும் நம்ம நிலம் முழுவதும் நட்டு கிட்டு இருக்கேன்... அவைகளை என் கண்ணுக்கு மேலா பாதுகாத்துக் கிட்டு இருக்கேன்... அது மட்டும் இல்ல... பல பேரை மற்றும் வளர்க்கவும் சொல்லிக்கிட்டு இருக்கேன்..." என்று தாத்தா சொல்லிக்கொண்டு இருக்கும்போது...

"தாத்தா..." என்று கூப்பிட்டுக் கொண்டு ஓர் இளைஞர் வந்தார்.

அவரைக் கண்டதும், "வாடா மாப்பிள்ளை..." என்று அழைத்தார்.

"வெத்தலையும், சீவலும் வாங்கிக்கிட்டு வரச் சொன்னிங்களே..." என்று கைப் பையில் இருந்து எடுத்துக் கொடுத்தார் அவர்.

"முருகானந்தம் மாப்பிள்ளை, அப்படியே உள்ளே போயி, வெத்தலப் பொட்டி இருக்கு, அதை எடுத்துக்கிட்டு... அங்கே வாழைப்பழம் இருக்கு உனக்கு வேண்டியதை எடுத்துக்கிட்டு வா...."

வந்தவர் உள்ளே சென்றார்...

"தனம் செல்லம்... தண்ணி குடிச்சியா?" என்று ஆட்டுக்குட்டியைத் தடவியபடியே கேட்டார், தாத்தா.

"இத்தாங்க தாத்தா...." வெற்றிலைப் பெட்டியை அவரிடம் கொடுத்துவிட்டு, அவர் உள்ளே இருந்து எடுத்து வந்த வாழைப்பழத்தைச் சாப்பிடத் தொடங்கினார்...

“ஏண்டா மாப்பிள்ளை, இன்னும் ரெண்டு எடுத்துக்கிறது தானே...”

“போதும் தாத்தா...”

“பேரான்டி... இளநீர் குடிப்போமா...?”

குடிக்கலாம் தாத்தா...

“மாப்பிள்ளை... பழத்தைச் சாப்பிட்டு... செவ்விளநீர் மரத்திலே ஏறி... உனக்கு எத்தனை வேணும்...?

“ஒண்ணு போதும் தாத்தா...”

“சரி, நீ போய் தெக்கு மூலையிலே இருக்கிற அந்த மரத்திலே ஏறி பறிச்சிகிட்டு வா...”

தாத்தா... நானும் போயிட்டு வரட்டுமா... ஆவலோடு கேட்டேன்...

“வா... நானும் வர்றேன்....” என்றார், தாத்தா.

“இளநீர், நல்லா இருந்துச்சு தாத்தா...”

“அப்படியே?”

இளநீர் பறிச்சி கொடுத்த அங்கிள் யார் தாத்தா?

“நம்ம சொந்தக்காரப் பையன்தான். நல்ல மாமா...

இந்தத் தாத்தா சொல்ற எல்லா வேலைகளையும் சொன்னபடியே செய்துட்டு வருவான்....”

“ஓ, அப்படியா...?”

“பேராண்டி, தீபாவளிக்கு உனக்கு துணி எல்லாம் அம்மா எடுத்துட்டாங்களா?”

என்னோட அளவு எல்லாம் அம்மாவுக்குத் தெரியும்...

எடுத்திடுவாங்க...

"நாளைக்கு நாம கும்பகோணம் போய் உனக்கு சட்டை, பேண்டு எல்லாம் எடுத்திடுவோம், வரியா?"

பரவாயில்ல தாத்தா, உங்களுக்கு செலவு எதுக்கு...?

"இதுல எனக்கு என்ன செலவு வந்திடப் போவுது...?"

தாத்தா, என்னுகிட்ட அதிகமா துணிகள் இருக்கு, வேணாம்...

"அப்படின்னா... ஆயிரம் ரூபாய்க்கு... நீ போகும்போது பட்டாசு வாங்கித்தர்றேன்...."

"அதெல்லாம் வேணாம் தாத்தா.... அப்படியே நீங்க பட்டாசு வாங்கினா, அதை பஸ்ஸிலோ, இரயிலிலோ எடுத்துகிட்டுப்போக முடியாது... போலீஸ் பிடிச்சுடுவாங்க..."

தாத்தா வாய்விட்டுச் சிரித்து.... "ஆமாம் பேராண்டி.... அதை நான் மறந்தே போயிட்டேன்."

பட்டாசு வாங்கி காசை கரியாக்கணுமா? பட்டாசு வெடிக்கறதாலே ஊரெல்லாம் குப்பையாகிடும். அதன் புகையால் பல நோய்கள் வரும்... சுற்றுப்புறச் சூழலும் கெட்டுப்போய்விடும்... நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பட்டாசு வெடிக்கிறதை விட்டுட்டேன் தாத்தா....

"நீ அறிவாளிடா பேராண்டி, வேறு என்னதான் உனக்கு வேணும்...?"

ஏதாவது என் பேரனுக்குக் கொடுக்கணும், சொல்லு...."

நீங்க எனக்கு பணமா கொடுத்திடுங்களேன்...

"பணத்தை நீ என்ன செய்வே?" கேட்டார்.

தாத்தா, நீங்க எவ்வளவு பணம் கொடுக்கிறிங்களோ, அதை ஐம்பது குழந்தைங்க மகிழ்ச்சி அடையறது போல செய்திடுவேன்...

"நீ என்ன சொல்ற...?"

தாத்தா, நாங்க இருக்கிற தெருவுக்கு அடுத்தத் தெரு வழியா தான் நான் ஸ்கூலுக்குப் போவேன்... அந்தத் தெருவுல ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் இருக்கு.. அம்மாகூட அந்த காப்பகத்துக்கு மாதா மாதம் நூறு ரூபாய் கொடுக்குறாங்க...

நீங்க தீபாவளிக்கு கொடுக்கிற பணத்தை அந்தக் குழந்தைகள் காப்பகத்துக்கு கொடுக்கலாமுன்னு நினைக்கிறேன்... தாத்தா,,என்று சொன்ன என்னைக் கட்டிக் கொண்டு..

“இல்லாதவர்களுக்கு செய்கிற உதவி நாம் கடவுளுக்கு செய்ற மாதிரி.... உன்னோட மனசு எப்போதும் இப்படியே இருக்கணும்... உன் விருப்பப் படியே... ஆயிரம் ரூபாய் நீ ஊருக்குப் போறும்போது தர்றேன்.... என்று கட்டிப் பிடித்து முத்தமிட்டார், தாத்தா என்னை.

“தாத்தா, மிக்க நன்றி!

2

வேப்பமர நிழலிலே....

தனத்துப்பாட்டி என்றும் சூரிய உதயத்திற்கு முன்பே எழுந்து விடுவார், அன்றும் அப்படித்தான் எழுந்தார்...

காலைப் பணிகளை முடித்து கட்டிலில் வந்து அமர்ந்தவர். அங்கே கிண்ணத்தில் இருந்த விபூதியை எடுத்து கிழக்குப் பக்கமாக நின்று, "ஓம் முருகா.... ஓம் முருகா" என்றபடியே நெற்றியில் பூசிக் கொண்டவர், அங்கே இருந்த வேப்பமரத்தை மூன்று முறை சுற்றி வந்தபின், மீண்டும் கட்டிலில் அமரவும், மருமகள் நீலா காபியுடன் வரவும் சரியாக இருந்தது.

"வாம்மா... உன் புருஷன் எழுந்துட்டானா?"

"எழுந்துட்டாங்க... இப்பதான் காபி குடிச்சுட்டு வயலுக்குத் தண்ணிப்பாய்ச்சப் போயிருக்காங்க..."

"சரி, என் பேரன் எழுந்திட்டானா.... அவனுக்கு நாளைக்குப் பரீட்சைன்னு சொன்னானே..."

"ஆமாங்க அத்தை... பால் கொடுத்தேன் குடிச்சிட்டுப் படிக்கிறான்..." என்றபடியே காபியைக் கொடுத்தாள்.

காபியைக் குடித்தப் பாட்டி, "நீலா பேரன் விளையாட்டுப் பிள்ளை... பரீட்சை முடியிற வரைக்கும் பக்கத்திலேயே இருந்து படிக்க வை..."

"சரிங்க அத்தை..." என்றபடியே மாமியார் குடித்து வைத்த காபி தம்ளரை எடுத்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்தாள், நீலா.

தனத்துப்பாட்டி தனக்குத்தானே, 'பேரன் இருக்கிற அழகையும், அவன் பள்ளிக்கூடம் போறதையும் பாக்கக் கொடுத்து வைக்காம... போயிட்டாங்களே...' என்று பேசியபடியே பக்கத்தில் இருந்த வெற்றிலைப்பெட்டியைத் திறந்து, சிறிது சீவலையும், தேவையான அளவு வெற்றிலையையும் கிள்ளிப்போட்டு, சுண்ணாம்பையும் சேர்த்து, பாக்குரலில் இடிக்க ஆரம்பித்தார்...

வெங்கடாசலம் அந்த ஊரில் குறிப்பிடத்தக்க, வித்யாசமான விவசாயி. ஆமாம், எக்காரணத்தை முன்னிட்டும் தன் நிலத்தில், கண்ட கண்ட மேல் நாட்டு உரங்களை வாங்கிப் போட்டு விவசாயம் செய்யவே மாட்டார். இயற்கை உரங்களை பயன்படுத்துவார். அவர் எப்போதும் மண் வளத்தையும், பிறர் உடல் நலத்தையும் பெரிதும் மதிப்பவர்.

வெங்கடாசலத்திற்கு தக்கவயதில் அவரது பெற்றோர், உறவில் இருந்த பெண்ணான தனத்தையே திருமணம் செய்து வைத்தார்கள்...

தனம் குடும்பப்பாங்கான பெண் என்பதால், புகுந்த வீட்டில் நற்பெயரை எடுத்தார். தனம் அந்தக் காலத்திலேயே அவள் ஊரிலேயே ஏஸ்.ஏஸ்.எல்.சி படித்தப் பெண் இவள்தான்.

தனம் தன் கணவரை நேசித்தது போலவே, மாமியார், மாமனாரையும் நேசித்ததோடு, சுற்றங்களையும், அவளது அன்பால், பண்பால் தன்வசம் ஆக்கிக் கொண்டவள்..

தனம் ஓராண்டில் ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு கிருஷ்ணன் என்று பெயரிட்டு உறவே

மகிழ்ந்தது.

இந்த இனிய வேளையில்தான், வானம் பொய்த்ததால், விளைநிலங்கள் எல்லாம் தண்ணீரின்றி தாகத்தோடு இருந்தைக் கண்டு, மனம் கசிந்து போனார், வெங்கடாசலம்.

தோட்டத்தில் இருந்த கிணற்றைப் பார்த்தவருக்கு கண்களில் நீரே வந்துவிட்டது. கிணறும் தண்ணீரின்றி வெறும் குழியாக இருப்பதைக் கண்டதும், மறுநாளே, இரண்டு ஆட்களோடு கிணற்றில் தூர் எடுக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார்.

அவர்களது இரண்டு நாள் உழைப்பிற்குப் பின்

கிணறு, நீராய்க் கண்திறந்து...

அதைக் கண்டு மகிழ்ந்துபோன வெங்கடாசலம் தன் உடலில் வழிந்த வியர்வைத் துளிகளை, கிணற்றிலிருந்து வெளிப்பட்ட நீரைக் கொண்டு கழிவிவிட்டு, கிணற்றுக்குள் இருந்த அவர், தலை நிமிர்ந்து மேலே பார்த்தபடியே "ஏய் கலியா, தண்ணீர் வந்திடுச்சி, நீ கயித்த கீழே விடு, நான் மேல வந்துடுறேன்..." என்று உரத்த குரல் கொடுத்துக் கொண்டு இருக்கும்போதே, கிணற்றின் மேல் மண் சரிந்துவிழ, ஒரு நொடியில் கிணறுக்குள்ளேயே புதைந்து போனார்.

ஊர் கூடியது, உறவுகூடியது... அவரின் மனைவி தனம் மட்டும் தனித்துப் போனாள்....

விழியில் கசிந்த கண்ணீரை முந்தானையில் மறைத்துக் கொண்டு, அதுவரை இடித்த வெற்றிலைப் பாக்கை வாயில் போட்டுக் கொண்டு, அவர் எப்போதும் படிக்கும் திருஅருட்பாவை எடுத்து...

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்....

என்று படித்துக் கொண்டு இருக்கும்போது, பேரன் பாரி, "பாட்டி...." என்று பாசத்தோடு அழைத்துக் கொண்டே, காலை உணவை எடுத்துக் கொண்டு வந்தான்.

"என்ன பாரிக்கண்ணு... ஸ்கூலுக்குக் கிளம்பிட்டிங்களா?"

“ஆமாம் பாட்டி... இந்தாங்க... சாப்பிடுங்க...” என்றான்.

பேரன் பாரி கொண்டு வந்த இட்லித்தட்டை வாங்கி கட்டிலில் வைத்துவிட்டு, வாயைக் கொப்பளித்த பாட்டி... “கண்ணு நீங்க சாப்பிட்டிங்களா?”

“ஓ...சாப்பிட்டேனே...”

“எத்தனை இட்லி சாப்பிட்டிங்க...?”

“த்திரி....”

“நல்லதைச் சாப்பிடனும், நல்லா சாப்பிடனும்... அப்பதான் உடம்பு நல்லா இருக்கும்...”

“பாட்டி பாலும் குடிச்சேனே...”

“அப்படியா... சரி.. இந்தா” என்று ஒரு இட்லியைப்பிட்டு பாரி வாயில் வைக்கப்போக...

“நான் சாப்பிட்டதே போதும் பாட்டி” என்று வயிற்றைத் தடவி சசித்தான், பாரி.

“இது, பாட்டிக்காக...” என்றபோது...

“இதுமட்டும்தான்... இதுக்கு மேலே சாப்பிடச் சொல்லக் கூடாது...”

“சரிடா கண்ணு...”

தினமும் இப்படி பாட்டி செய்வது வாடிக்கைதானே என்ற எண்ணத்தில், சிரித்தபடியே, பாட்டி பாசமாய் ஊட்டியதைச் சாப்பிட்டான்...

“இன்னைக்கு என்ன பரீட்சைக் கண்ணு...”

“தமிழ்முதல் தாள்...”

“அப்படியா...?”

"மனப்பாடப் பகுதியில் இருந்த திருக்குறள்களை எல்லாம் மனப்பாடம் செய்திட்டியா...?" என்று பாட்டி கேட்டதும்...

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு...

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு..."

குறள்களை கடகட வென்று பாரி சொல்லத் தொடங்கியதும்.. மகிழ்ச்சியோடு பேரனை அணைத்து, "ரொம்ப நல்லா மனப்பாடம் செய்திருக்கே..." என்று முத்தமிட..

"பாட். டூ... இப்பவாவது நான் ஸ்கூலுக்குப் போகட்டுமா?" என்று பேரன் கேட்டதும், பாட்டி சிரித்தபடியே.. "சரிப்பா... போய் வா..." என்று கூறியதும், எட்டாவது படிக்கும் பாரி, வேகமாகப் பள்ளியை நோக்கி நடந்தான்...

வயலுக்கு போய்விட்டு, வீட்டிற்குள் நுழைந்த கணவரைப் பார்த்து.... "மாமா குளிச்சிட்டிங்களா?" என்று கேட்டாள் நீலா.

"ம்... வயலுக்கு தண்ணிப் பாய்ச்சும்போதே பம்பு செட்ல குளிச்சிட்டேன். சரி, உன் அத்தையும், பிள்ளையும் சாப்பிட்டாங்களா?

"சாப்பிட்டாங்க... பிள்ளையும் ஸ்கூலுக்குப் போயிட்டான். நீங்க வாங்க சாப்பிடலாம்..." என்றாள் மனைவி.

"எடுத்து வை... அம்மாவைப் பாத்துட்டு வர்றேன்...." என்று வெளியில் நடந்தான், கிருஷ்ணன்.

காலடி ஓசை கேட்டு, தொன்னூறு வயதிலும் கண்அணி போடாமல் படித்துக் கொண்டு இருந்த தனத்துப்பாட்டி தலை நிமிர்ந்து பார்த்தார்..

"கிருஷ்ணா சாப்பிட்டியா...?" கேட்டார், தாய்.

“எடுத்து வைக்கச் சொல்லி இருக்கேம்மா... மேல வயலுக்கு இன்னைக்கு தண்ணிப் பாச்சிட்டேனம்மா... கீழ வயலில் தான் அடுத்த வாரம் அறுவடை இருக்கே அதனாலதான் விடுல....”

“ஆமாம் அதுக்கு எதுக்கு?...ம்.. கும்பகோணத்துல இருந்து தேங்காய் வியாபாரி இன்னைக்குத்தானே வர்றேன்னு சொன்னாங்க?”

“ஆமாம்மா... சாப்பிட்டு நான் கிளம்பவேண்டியதுதான்...”
“கிருஷ்ணா, நம்ம வீட்லே வேலை செய்ற கலியனோட பொண்ணுக்கு அடுத்த வாரம்தானே கல்யாணம்?” கேட்டார், தாய்.

“ஆமாம் அம்மா...”

“அவன் வீட்டுக் கல்யாணத்துக்கு ஒரு மூட்டை தேங்காய் அனுப்ப மறந்திடாதே...”

“சரிம்மா.. நான் வர்றேன்...” என்ற கிருஷ்ணன் தன் கடமையில் ஈடுபட விரைந்து போனான்...

தனத்துப்பாட்டிக்கு ஐம்பதுபேர் வசதியாகத் தங்கக்கூடிய அளவில் சொந்தமாக பெரிய வீடு இருந்த போதிலும், அவர் தங்கி இருப்பது என்னவோ வீட்டுக் கொல்லையில் இருக்கும் வேப்பமரத்தின் அடியில்தான்.

ஆமாம், ஒரு கட்டில் போடக்கூடிய அளவில் பத்துப் பதினைந்து கீற்றுகளால் மறைக்கப்பட்ட இடத்தில்தான் தங்கி இருந்தார்.

அங்கேயேதான் சாப்பிடுவார்: படுப்பார் எல்லாமே அந்த வேப்பமரத்தின் நிழலில்தான்.

சொந்த பந்தங்கள் யார் பார்க்க வந்தாலும் அங்கே சென்றுதான் பார்க்க வேண்டும், பார்ப்பார்கள்.

அப்படித்தான் அன்றும் தனத்துப் பாட்டியின் தங்கை மகளான பூங்கோதையும் பார்க்க வந்திருந்தார்...

“பெரியம்மா...”

“வாம்மா பூங்கோதை.... பொண்ணு எப்படி இருக்கா...?”

“காலையிலே இருந்து சளி பெரியம்மா... அவுங்க அப்பா வந்தா டாக்டர் கிரீஸ் கிட்ட கூட்டிகிட்டுப் போகச் சொல்லணும்... இன்னைக்கு அவளை பள்ளிக்குக் கூட அனுப்பல...” என்றார், பூங்கோதை.

இதுக்கெல்லாம் ஏன் லீவு போடனும்? டாக்டரு கிட்டே கூட்டிக்கிட்டுப் போகணும்? பத்து துளசி இலையிலே எல்லாம் சரியா போயிடும்...”

“அப்படியா பெரியம்மா...” என்றபடியே, தான் கொண்டு வந்திருந்த டிபன் பாக்ஸை அவரிடம் வைத்தார், பூங்கோதை.

“என்னம்மா இது?” கேட்டார்.

“புட்டு செஞ்சேன். உங்களுக்குப் பிடிக்குமேன்னு கொண்டு வந்தேன்.”

“மருமகள் நீலாவுக்குக் கொடுத்தியா...? “கேட்டார், பாட்டி.

“கொடுத்தேன்... அத்தைக்குத்தான் புட்டு ரொம்ப பிடிக்குமுன்னு உங்க கிட்டேயே கொடுக்கச் சொன்னாங்க...”

“நல்லப் பொண்ணுங்க நீங்க... சரி இப்படி வை... என்பேரன் பாரி இப்ப ஸ்கூல்விட்டு வந்திடுவான்... நானும் அவனும் சேர்ந்து சாப்பிடுறோம்...”

“சரி பெரியம்மா... நான் வர்றேன்...” என்றாள்.

“சரிம்மா, குழந்தைக்கு, துளசி கசாயம் கொடுக்க

மறந்துடாதே..." இதோ பாரு, துளசிக்காக நீ எங்கேயும் அலையாதே.... அதோ பாரு நம்ம வேலி ஓரம் நானே வளர்க்கிறேன்.

கிளை கிளையா ஒடிச்சிடாம பத்து இலைகளை மட்டும் கிள்ளிக் கிட்டுப்போ....

"இதோ பாரு... துளசி, கொத்தமல்லி, புதினா போன்ற செடிகளை பெண்களே வீட்டுல வளர்க்கலாம். நாளைக்கு நீவா... நீயும் வளர்க்க செடிங்க தர்றேன்."

"சரிங்க பெரியம்மா... இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த மரத்தடியிலேயே இருக்கப் போரிங்க பெரியம்மா..?" என்று பூங்கோதை கேட்டதும்....

தனத்துப்பாட்டி சிரித்துக் கொண்டதும்... அவரும் சிரித்தபடியே அங்கிருந்து, நடந்தார்..

'இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த மரத்தடியிலேயே இருக்கப்போறீங்க பெரியம்மா...?' என்று கேட்ட தன் தங்கையின் மகள் பூங்கோதையை நினைத்து சிரித்துக் கொண்ட தனத்துப் பாட்டிக்கு...

இது இவளுக்கு மரமா தெரியுது... நான் இருப்பது அவளுக்கு மரத்தடியா தெரியுது... இந்த மரத்தின் மகத்துவத்தைப் பற்றி இவளுக்கு என்ன தெரியும்...

"இதோ பார் தனம்... நம் கல்யாணத்துக்கு மூர்த்தக்கால் நட்டபோது இந்த வேப்பங்கன்றை நான் நட்டேன்...

ஏன் நட்டேன்..? இப்ப நான் சொல்றதை மனசுலே பதிச்சு வச்சிக்க..

மரமும், மணவாழ்க்கையும் வளரக்கூடியது. அதனால்தான், நம் வாழ்க்கையின் தொடக்க நாளில் இந்த வேப்பங்கன்றை நட்டேன்.

நம்மைப்போல் ஒவ்வொருவரும், வாழ்வின் தொடக்கத்தில் ஒரு மரக்கன்றை நட்டால் போதும், மழை பெருகும், மண்வளம் கூடும். மனித இனம் வறுமை இன்றி வளமாய் வாழும்...

அதனால், இந்த மரத்தை இன்னையிலே இருந்து நீ என்னைப்போல கருதனும்; நானும் இந்த மரத்தை உன்னைப்போல பாதுகாப்பேன்.

இந்தக் கன்று வளர்ந்ததும் எல்லோரும் மரமாகப் பார்ப்பார்கள். நாம் இதை எதிர்கால வெளிச்சமாகப் பார்க்க வேண்டும். நாம் வணங்கும் தெய்வமாக கருதவேண்டும்...

என் வீட்டுக்கார்ர், கல்யாணம் நடந்த அன்று மாலையே இதோ, இதே இடத்திற்கு என்னை அழைத்து வந்து, அன்று கன்றாக இருந்து, இன்று மரமாக நிமிர்ந்து பெரிதாய் நிற்கும் இந்த வேப்ப மரத்தின் வரலாற்றை எல்லோரிடமும் விளக்கிச் சொல்லிக்கொண்டு இருக்கமுடியுமா, என்ன? கடந்த கால நினைவில் இருந்தவரை...

"பாட்டி..." என்ற ஒரே பாசக்குரல், திசை திருப்பியது... "பாரிக்கண்ணு வந்திட்டியா?" கேட்டார், பாட்டி....

"பாட்டி நான் காலையிலே உங்ககிட்டே சொன்ன திருக்குறள் எல்லாம் தேர்விலே கேட்டு இருந்தாங்க... நல்லா எழுதியிருக்கிறேன்...

"என் சமத்து, பூங்கோதை பெரியம்மா புட்டு கொண்டு வந்திருக்காங்க... சாப்பிடுவோமா?

"அப்படியா.. நான்போய் டிரஸ் மாத்திட்டு, கை, கால் கழுவிட்டு வந்திடுறேன், பாட்டி..."

பேரனின் செயலைக் கண்டு மகிழ்ந்துகொண்டு இருந்தார், பாட்டி.

தனத்துப்பாட்டியின் கணவரின் நினைவுநாள் அன்று... வழக்கம்போல் காலைப் பணிகளை எல்லாம் முடித்து விட்டு, தன் கணவரின் நிழற்படத்தை வேப்பமரத்தின்

அடியில் வைத்து வணங்கிவிட்டு, அதை பின் எடுத்து வந்து, தன் கட்டிலுக்கு அருகில் வைத்திருந்த பெட்டியில் வைத்துக்கொண்டு இருந்தபோது... மகன் கிருஷ்ணன் வந்தான்.

"அம்மா, ஆற்றுக்குப்போய் அப்பாவுக்கு திதி கொடுத்துவிட்டு வர்றேன்..."

"சரிப்பா... பிள்ளையையும் கூட்டிகிட்டுப் போப்பா."

"சரிம்மா...."

கணவருக்கு திதி என்பதால், தண்ணீர் கூட அருந்தாமல் விருதம் இருந்தார், பாட்டி...

வழக்கம்போல் திருஅருட்பாவை எடுத்துப் படித்துக் கொண்டு இருந்தவர், என்ன நினைத்தாரோ... திடீரென்று புத்தகத்தை மூடிவிட்டு, பெட்டியிலிருந்த நோட்டை எடுத்தவர் - அதில்...

தலைதீபாவளிக்கு தன் கணவருடன் எடுத்திருந்த நிழற்படத்தை கையில் எடுத்தவர் நீண்ட நேரம் அதையே பார்த்துக் கொண்டு இருந்தவருக்கு மகிழ்ச்சியும், துக்கமும் மாறி மாறி மனதில் தோன்றி மறைந்தன.

அந்தப் படத்தை அப்படியே பக்கத்தில் வைத்து விட்டு ஏதோ நோட்டில் எழுதினார். எழுதிய பக்கத்திலேயே அந்த நிழற்படத்தையும் வைத்தார்.

நோட்டை மடியில் வைத்துக் கொண்டார். அப்படியே வேப்பமரத்தின் அடியில்போய் அமர்ந்து, மரத்தைத் தடவியபடியே இருந்தார்...

திதி கொடுத்து விட்டு கிருஷ்ணனும், அவர் மகனும் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

வீட்டிற்குள் வந்த பாரி பாட்டியைப் பார்க்க ஓடினான். பாட்டி மரத்தடியில் இருந்ததைப் பார்த்த பேரன், "பாட்டி, பாட்டி..." என்று அழைத்தபடியே, எப்போதும் போல் அவர் கழுத்தைக் கட்டிப்பிடித்து அவர் மீது சாய்ந்தான்.

அவ்வளவுதான் பாட்டியுடன் அவனும் கீழே சாய்ந்தான்.

கீழே விழுந்த பாட்டியைத் தொட்டு "பாட்டி பாட்டி..." என்று அழைத்தான்.

பாட்டி எழாமல் இருந்ததால், வீட்டிற்குள் ஓடி வந்து தாய், தந்தையிடம் பதற்றத்தோடு கூறினான்....

தாய் படுத்திருந்த நிலையைக் கண்டு "அம்மா".... என்றபடியே அவர் தலையைத் தூக்கி மடியில் வைத்துக் கொள்ள கிருஷ்ணன்..

அவர் தலை தொங்கிபோய் இருந்ததைக் கண்டு

"அம்மா! எங்களை விட்டுட்டுப் போயிட்டிங்களா...?

"அத்தை..." என்று கதறி அழுத மருமகள், அவர் மடியில் இருந்த நோட்டைப் பார்த்தும், உடனே அதை எடுத்து கணவரிடம் கொடுத்தாள்..

பதட்டத்தோடு நோட்டை மகன் கிருஷ்ணன் பிரிக்க, அதில் இருந்த நிழற்படம் கீழே விழ, அதை எடுத்துப் பார்த்துவிட்டு, அது இருந்தப் பக்கத்தில் எழுதியிருந்ததைப் படித்தான்.

இது நாள்வரை, என் கணவர் வைத்து வளர்த்த இந்த வேப்பமரத்தின் நிழலிலே வாழ்ந்து வந்தேன். இனியும் அவர் நிழலிலேயே நான் வாழவேண்டும் அதனால், என்னை இங்கே புதைத்து விடுங்கள்...

உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்... தனம் வெங்கடாசலம்.

"அப்பா, பாட்டி சாமிகிட்டப் போயிட்டாங்களா?" கேட்டான் மகன் பாரி. "பாட்டி எப்போதும் நம்மோடு இருப்பாங்கடா..." என்று கூறி வேப்பமரத்தைக் கட்டிப் பிடித்து கதறிக் கதறி அழத்தொடங்கினான், கிருஷ்ணனும்,

அவள் மனைவி, நீலாவும்!...

3

நீங்க நல்லா இருக்கணும்...

“ஏய் பெரியவனே, நான் சொல்றதைக் கேளுடா...”

“அதெல்லாம் முடியாது. நீ சொல்றதைக் கேட்டா, ஆறு ஏழுவருசத்துக்கு ஒரு ரூபாய் கூட வருவாய் வராது...”

“இதோ பாரு, உனக்கு சோறு போடுகிறோம்; ரெண்டு வேல காபி கொடுக்கிறோம். வெத்தலப்பாக்கு வாங்கிக் கொடுக்கிறோம்... அப்பப்ப நீ கேட்கிறதை எல்லாமும் வாங்கிக் கொடுக்கிறோம். அதைவிட உனக்கு என்ன..! நீ சும்மா இரு..!” என்றான். அவரது இரண்டு பேரன்களில் சின்னப்பேரன் சிவா.

“டே சிவா, அவுங்க கிடக்குறாங்க... நீபோய் நான் சொன்னதுபோல எல்லாத்தையும் வாங்கிக்கிட்டு வா...” என்றான். சிவாவின் அண்ணன், சீனிவாசன்.

“டே... நான் சொல்றதை நீங்க கேட்கப் போறீங்களா இல்லியா...?” என்று கோபமாக கேட்டார் இவர்களின் பாட்டி பார்வதி.

“இதோ பாரு கிழவி, நீ எதைச் சொன்னாலும் நாங்க கேட்க மாட்டோம்... எங்க இஷ்டப்படிதான் செய்வோம்... நீ என்ன செய்வே...?” என்றான், சிவா.

“அந்த மனுஷன் உயிரோட இருந்தா.... நேத்துப் பொறந்த நீங்கெல்லாம் இப்படி பேச விட்டிருப்பாரா? எல்லாம் என்

தலை விதி...” என்று அழ ஆரம்பித்தார், பாட்டி.

“இதோ பாரு, இப்ப என்ன நடந்து போச்சு? எதுக்கு அழுவுறே?” கேட்டான் முதல் பேரன், சீனிவாசன்.

“இன்னும் என்ன நடக்கணுங்கிறிங்கடா... டே, நான் சொல்றது எல்லாம் உங்க நல்லதுக்குதான். அது இப்ப உங்களுக்குப் புரியாதுடா.... உங்கப்புள்ளங்க எல்லாம் வளர்ந்து கல்யாணம் காட்சின்னு நிக்கும்போதுதான்டா தெரியும்! அடே... அன்னைக்கு பாட்டி சொன்னதுபோல செஞ்சி இருந்தா, இப்ப உதவி இருந்திருக்குமோன்னு நெனைப்பிங்க...” என்று மீண்டும் கண்களை கசக்கினார்.... பாட்டி.

“இதோ பாரு கிழவி, ஏழு வருஷம், எட்டு வருஷம் கழிச்சி வரப்போறதப்பத்தி எல்லாம் இப்ப எங்களுக்குக் கவலை இல்லை. இன்னைக்கு என்ன நடக்கணும். நாளைக்கு என்ன நடக்கணுங்கிறதைப் பத்திதான் எங்களுக்குக் கவலை... புரியுதா?” என்றான், சிவா.

“இதோ பாருங்கடா... மேலண்ட கொல்லையிலே பருத்திப் போட்டு இருக்கிங்க... ஆத்து ஓரம் இருக்கிற நிலத்துல கரும்பும், வாழையும் போட்டு இருக்குங்க... அப்புறம் என்னங்கடா...?” கேட்டார், பாட்டி.

“ஆமாம், நீ சொல்றது போலதான் பருத்தி, வாழை, கரும்பு போட்டு இருக்கோம். அதுல இருந்து ஒரு மாசம் ரெண்டு மாதத்துல பணம் கிடைச்சிடுமா?” கேட்டான், சிவா.

“இதோ பாரு... வாழையிலே இருந்து பணம் கிடைக்கப் பத்து மாசம் ஆகும். அப்படித்தான் கரும்பும்... அப்படி இருக்கும்போது எங்க செலவுக்கு நாங்க கடன்தானே வாங்க வேண்டி இருக்கு...

அதனாலதான் அந்த நெலத்துல நாங்க நெனக்கிற மாதிரி பயிர் செய்றோமுன்னு சொல்றோம்...” என்றான், சீனிவாசன்.

“வர்ற பணத்துல சிக்கனமாக செலவு செய்தா ஏண்டா கடன் வாங்கனும்? தினமும் உங்களுக்கு குடிக்கப் பணம் வேணும். ஊர் சுத்தப்பணம் வேணும்.... அப்படி இருந்தா கடன்தான் வாங்கணும்?” என்றார், பாட்டி.

“டே தம்பி, இந்த 'ஓல்டு' எங்க வருது தெரியுமா? போலீசா இருந்த என் புருஷன் இறந்துபோனதுக்கு வர்ற பென்ஷன் பணத்தை எல்லாம் உங்க கிட்டே தானடா கொடுக்கிறேன். அப்புறம் எப்படிடா கடன் வருமுன்னு கேட்காம கேட்குது...”

“எனக்கா அண்ணே புரியாது...” என்று சிரித்தான், சிவா.

“உங்க கேலி பேச்சுக்கெல்லாம் ஆளாகும்படி என் மருமகளும், என் மகனும் லாரியிலே அடிபட்டு போய் சேர்ந்துட்டாங்களே...

அவுங்க இருந்தா நீங்க இப்படி எல்லாம் பேசுவிங்களா...? எல்லாம் என் போதாத காலம்....

நான் கண்டிப்பாக சொல்றேன்... நான் சொல்றதைப்போல நீங்க செய்லேன்னா, நான் வேற முடிவைத்தான் எடுக்க வேண்டியிருக்கும். அப்புறம் யாரும் வருத்தப்படக்கூடாது...” என்று ஒரு முடிவோடு பேசினார், பாட்டி.

“இதோ பாரு கிழவி, சாகப்போற காலத்துல என்ன முடிவெடுக்கப்போறே? இப்படி நீ பூச்சி காட்டினா நாங்க பயந்திடுவோமா...?” என்றான், சீனிவாசன்.

“அப்படி என்னதான் முடிவை எடுக்கப்போற, அதையும்தான் சொல்லேன் கிழவி...” என்று கேட்டான், சிவா.

பாட்டி சொன்னார்...

அதைக்கேட்டதும், இரண்டு பேரன்களும் பதற்றத்தோடு ஆடிப்போனார்கள்...

அதே நேரம், கடைக்கு காய்கறி வாங்கப்போன சீனிவாசனின் மனைவியும், சிவாவின் மனைவியும் வீட்டினுள் நுழைந்தார்கள்.

பாட்டியின் முகத்தையும், பேரன்கள் இரண்டு பேரும் நின்று கொண்டு இருப்பதையும் கண்ட சீனுவின் மனைவி, "என்ன பாட்டி, வழக்கம்போல இன்னைக்குக் காலையிலேயே சண்டையை ஆரம்பிச்சிட்டார்களா?" என்று சீனுவின் மனைவி கேட்டாள்.

"நீங்க வாங்கப் பாட்டி.... சாத்துக்குடி ஜூஸ் போட்டுத் தர்றேன்..." என்றான், சிவாவின் மனைவி அழைத்தாள்.

மூவரும் அங்கிருந்து சென்றதும், "டே தம்பி, இந்தக் கிழவி சொன்னதுபோல செஞ்சிட்டா..?" கேட்டான், சீனு.

"நாம அவ்வளவுதான், நடுத்தெருவிலே நிக்க வேண்டியதுதான்.." என்றான் பயத்தோடு, சிவா.

"ஆமாண்டா.... நம்ம கிட்ட இருக்கிற சொத்து எல்லாமே பாட்டி சொத்துதான்.. அப்பாவும் நாமும் இதுவரை ஒரு குழி நிலம் கூட வாங்கலே..."

"ஆமாண்டா அப்படி இருக்கும்போது, அந்தக் கிழவி சொன்னது போல எல்லா நிலத்தையும் குத்தகைக்கு விட்டுட்டா.... நம்ம பொழப்பு அவ்வளவுதான்டா..." என்றான், அண்ணன், சீனிவாசன்.

"ஆமாண்ணே... பாட்டி சொல்றதுபோல அவுங்க நிலத்துல... நமக்காக அன்றாட தேவைக்கு பயிர்செய்ய நினைத்த கொத்தமல்லி, கீரை, காய்-கறிச் செடிகளை பயிர் செய்யாம, அவுங்க சொன்னதுபோலவே பயிர் செய்திடலாம்..." என்ற முடிவோடு, வீட்டில் இருந்து வெளியே சென்றார்கள்...

“பேத்திங்களா... உங்க புருஷனுங்க எல்லாம் சாப்பிட்டானுங்களா?”

“அவுங்க காலையிலேயே சாப்பிட்டுட்டு போயிட்டாங்களே..” என்றாள், சீனுவின் மனைவி.

“பாட்டி, ஏன் இப்பவெல்லாம் உங்ககிட்ட சண்டையே போடுறது இல்லை.... நேத்தி நீங்க சண்டை போடுறப்ப என்ன பாட்டி சொன்னிங்க?” என்று சிவாவின் மனைவி கேட்டாள்.

பாட்டி ஏதும் பதில் கூறாமல் சிரித்தார்... பாட்டியின் சிரிப்பைப் பார்த்ததும்...” அப்படி என்னதான் சொன்னிங்க? கேட்டாள், சீனுவின் மனைவி.

தான் நேற்று சொன்னதை எல்லாம் சிரித்த படியே பாட்டி சொன்னார்...

அவர்களும் சிரித்தபடியே..” “அதான் மாங்கன்னு, கொய்யாக் கன்னு, மாதுளங்கன்னு வாங்கனுமுன்னு பேசிக்கொண்டு இருந்தார்களோ....” என்றாள், சீனு மனைவி.

அவள் சொன்னதைக் கேட்டதும்... தன் கனவு நிறைவேறப் போகிறது என்பதை நினைத்ததும், பாட்டியின் மனது மகிழ்ச்சியால் நிறைந்துபோனது...

மாங்காய் விற்றப்பணத்தையும், பலாக்காய், விற்றப் பணத்தையும் கையில் வைத்து இருந்த சீனுவின் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டு இருந்ததைக் கண்ட தம்பி கேட்டான்...” ஏன் அண்ணே அழுவுறே...?” என்று.

“எதிர் காலத்துல நாம நல்லா இருக்கணுமுங்கிறதால, தீர்க்க தரிசியைப்போல பழம் தரும் மரங்களை நடுங்க. அது நாட்டுக்கும் நல்லது தரும். உங்களுக்கும் நல்லது தரும்னு சொன்னாங்க.

அதுபோல இப்ப கைநிறைய பலன் வந்திருக்கு... இந்தப் பணத்தைப் பாட்டி கையிலே கொடுத்து வாங்க முடியிலேயேன்னு நெனைச்சேன்டா, அதான்.”

சில்லரைப் பயிர்களான கீரையும், காய்கறியும் பயிர் செய்றதோட, பிற்காலத்தில் எல்லோருக்கும் பயன்படுறதைப்போல, மரங்களை நடுநடுன்னு சொன்ன பாட்டியை பல தடவை கிண்டல் செய்ததுக்காக நானும் இப்ப வருத்தப்படுறேன் அண்ணே...” என்றான், சிவா.

“சரி, இந்தப் பணத்தை எல்லாம் பிள்ளைங்க எதிர் காலத்துக்காக பேங்குல போடலாம் வாடா...” என்று தம்பி சிவாவை அழைத்துக் கொண்டு போனான், சீனிவாசன்.

4

தாலி...

“இதோ பாருங்க... குடியை நிறுத்துங்க...” என்று அழாத குறையாக தன் கணவனிடம் சொல்லிக் கொண்டு இருந்தாள் மனைவி, செண்பகம்.

“அதைச் சொல்ல நீ யாருடி? உன்னக் கட்டுறதுக்கு முன்னே இருந்து நான் குடிக்கிறேன்... அதை எப்படி நிறுத்த முடியும்...?

முன்னல்லாம் படிச்சாதான்... மதிப்புன்னாங்க... இப்பெல்லாம் குடிச்சாதான் மதிப்பு... அதெல்லாம் உனக்கு எங்கே புரியப்போகுது...” என்றான், நடேசன்.

“ஏன் கண்டபடி பேசுறீங்க...?”

“ஏய், வீணாப்பேசாதேடி... எனக்கு நேரம் ஆகுது... பணத்தைக் கொடு...”

“இருந்ததை எல்லாம்தான் நேத்து எடுத்துக்கிட்டுப் போயி குடிச்சிட்டு வந்துட்டிங்களே... என்னுகிட்டே பணம் இல்லிங்க..”

“மரவியாபாரம் படிஞ்சி இருந்தா, ஒங்கிகிட்டே கெஞ் சிக்கிட்டு இருக்க மாட்டேன்... இந்நேரம் கடையிலே... கறி, மீனோட... புல்லா ஏத்திக்கிட்டு இருப்பேன்... விலைபடியலே...”



“நீங்க என்ன சொல்றீங்க...?”

“ஆமாண்டி.. நம்ம வயல் மேட்டிலே நிற்கிற புளிய மரத்தைதான் விலைபேசினேன்.. “நகை இருந்தா கொடு”

“பாவி மனுசா... அதையா விலை பேசின...? நல்லா காய்க்கிற அந்த மரத்தை எப்படி விக்க மனசு வந்ததோ...?”

“ஏய், அனாவசியமா.. பேசாத... நாளைக்கு விலை படிஞ் சிடும்.. இன்னைக்குடிக்கப் பணம் கொடு...”

“என்னுகிட்டே பணம் இல்ல...”

“தாலிதான் கிடக்குது..”

“தாலின்னும் சொல்லலாம், நகைன்னும் சொல்லலாம். கழட்டிக் கொடு...”

“அதை கொடுக்க முடியாது...”

“நான்தான் உயிரோட இருக்கேனே... அப்புறம் ஏண்டி அதைவேற கழுத்துல போட்டுகிட்டு...” என்று எதிரே இருந்த மனைவியின் கழுத்தில் இருந்து பறித்துக் கொண்டு, மதுக்கடையை நோக்கி வேக வேகமாக நடந்தான், நடேசன்.

வயல் வெளியைத்தாண்டி, கடை வீதியில் இருக்கும் மதுக்கடையை நோக்கி நடந்து கொண்டு இருந்தவனின், கண்ணில் நேற்று விலைபேசிய புளியமரம் கண்ணில் பட்டதும், ‘உனக்கு ஒரு நல்ல விலையை வியாபாரி கொடுத்திருந்தா, இப்ப இந்தத் தாலியை அறுத்திருக்க வேண்டியது இல்ல.’ என்று எண்ணியபடியே... பையில் இருந்த தாலியைத் தொட்டுப் பார்த்தபடியே... வேகமாக நடந்தான், நடேசன்.

இருட்டத் தொடங்கிய நேரம் வந்ததும், பகல்

முழுவதும் புதரில் மறைந்து இருந்த சிறுத்தைப்புலி இரை தேட வெளிப்பட்டு சாலையில் வந்து கொண்டு இருந்தது.

சிறுத்தைப்புலி தூரத்தில் வருவதைப்பார்த்த நடேசனுக்கு கொலை நடுக்கம் ஏற்பட்டு விட்டது. இன்று நாம் தொலைந்தோம்... என்ற நிலையில் வந்த வழியே திரும்பி ஓடத் தொடங்கினான்.

அவனை அடித்துத்தின்ன பசியோடு சிறுத்தைப் புலியும் தொடர்ந்து கொண்டு இருந்தது.

அந்த நிலையில்.. அவன் நிலத்தில் நின்றிருந்த புளிய மரத்தில் வேக வேகமாக ஏறிக்கொண்டான்.

பசியோடு ஓடி வந்த சிறுத்தைப்புலி, மரத்தின் கீழே நின்றபடியே நாக்கைத் தொங்கப்போட்டு, சிறிது நேரம் நின்று கொண்டிருந்த புலி... பின் அந்த மரத்தின் அடியிலேயே படுத்துக்கொண்டது...

எப்படியோ உயிரைக் காப்பாற்றிக் கொண்டோம்... என்ற நிலையில் நடுக்கத்தோடு மரக்கிளையில் ஒண்டிக் கொண்டு இருந்தான், நடேசன்.

கீழே படுத்திருந்த சிறுத்தைப்புலி, நாக்கைத் தொங்கப்போட்ட நிலையில் மரத்தை அன்னாந்து பார்த்தபடி படுத்துக்கொண்டு இருந்தது...

நடேசனுக்கு உயிர்பயம் நொடிக்கு நொடி கூடிக்கொண்டு இருந்தது...

நேரம் ஆக ஆக, டாஸ்மாக் கடை மூடி விடுவார்களே... என்ற தவிப்பு ஒருபுறம், கீழே இறங்கினால் உயிர்போய் விடுமே என்ற நிலை மறுபுறம்.

காலம் கடந்து கொண்டு இருந்தது... பசியும், குடிவெறியும் நடேசனுக்குள் வளர்ந்துகொண்டு இருந்தது.

நடேசன் சிறுத்தைப்புலியை பயத்தோடு பார்த்தபடியே மரக்கிளையில் ஒண்டி சாய்ந்து கொண்டு இருந்தான்.

சிறுத்தைப்புலியோ, நடேசனைப் பார்த்தபடியே

நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு இருந்தது.

பசியால் கலைத்துப்போன நடேசனுக்குத் தூக்கம் வரத்தொடங்கியது.... அதே நேரம் கீழே விழுந்துவிட்டால், நமக்காகக் காத்திருக்கும் சிறுத்தைப்புலிக்கு இரையாகி விடுவோமே என்ற பயத்தில் அவன் தூக்கம் கலைந்து போனது.

இரவு கழிந்து, பகல் மெல்ல வெளிச்சம் காட்டத்தொடங்கியது... அந்த விடியற்காலைப் பொழுதில், இரண்டு ஆடுகளை சந்தைக்கு ஓட்டிக்கொண்டு, அந்த வழியே ஒருவர் வந்து கொண்டு இருப்பதைக் கண்ட, சிறுத்தைப்புலி கண் இமைக்கும் நேரத்தில், பாய்ந்துபோய் ஒரு ஆட்டைத் தூக்கிக் கொண்டு புதருக்குள் ஓடியது.

இந்தத் திடீர் தாக்குதலால் மிரண்டு போன ஆட்டுக்காரர் "ஐயோ புலி.... புலி..." என்று சப்தம் போட, அந்த சப்தம் கேட்ட நடேசன் கீழே குனிந்து பார்த்தான்... சிறுத்தைப் புலியைக் காணவில்லை.

இதுதான் சமயமென்று, மகிழ்ச்சியோடு வேகமாக மரத்தில் இருந்து இறங்கினான்.... இறங்கியவன் வேக வேகமாக வீட்டை நோக்கி நடந்தான், நடேசன்.

வீட்டிற்குள் வந்த கணவனைப் பார்த்து, "என்ன பிராந்திக் கடையை இப்பதான் மூடினாங்களா?" என்று கேட்டாள், மனைவி.

எதுவும் பதில் சொல்லாமல் சட்டையை கழட்டிப் போட்டுவிட்டு கிணற்றுக்குச் சென்று குளித்து வந்தான்...

"இன்னும் போதை தெளியிலேயா... தாலியை வித்த பணத்திலே ஏதாவது மிச்சம் இருக்கா...?" என்று கேட்டாள், மனைவி.

நடேசன் எதுவும் பேசாமல், தான் கழட்டிப்போட்ட சட்டையில் இருந்த, தாலியை எடுத்துக் கொடுத்தான்.

அதைப் பார்த்தவள், என்ன என்பதுபோல், கணவனைப் பார்த்தாள், மனைவி.

அமைதியாக உட்கார்ந்து, இரவு நடந்ததை எல்லாம் மனைவிடம் மனம் திறந்து சொன்னான், நடேசன்.

"முருகா.... என் கணவரைக் காப்பாத்திக் கொடுத்த உன் கோயிலுக்கு வந்து நேர்த்திக் கடன் செய்றேம்பா...." என்று வேண்டிக் கொண்டாள்.

"செண்பகம், என்னைக் காப்பாத்தினது உன் முருகன் இல்ல... என் தாத்தா வளர்த்த புளியமரம்தான்... இப்ப நான் உயிரோடு இருக்கிறதுக்குக் காரணம்..

இந்த மரத்தை குடிக்காக வெட்ட இருந்தேனே.... அதை நினைக்கும்போது எனக்கு இப்ப வேதனையாக இருக்கிறது..." என்று உள்ளத்தால் வருந்திக்கொண்டு இருந்தான், நடேசன்.

கணவனின் மனமாற்றத்தைக் கண்டு மகிழ்ந்து நின்று கொண்டு இருந்தாள் மனைவி, செண்பகம்.

5

ஓரம்போ... ஓரம்போ... வண்டி வருது...

ஆதித்தனும், ஆனந்தனும் முதல் வகுப்பில் இருந்தே ஒன்றாகப் படிப்பவர்கள். ஒரே ஊரில், ஒரே தெருவில் இருப்பவர்கள்.

இருவரும் பள்ளிப் படிப்பை முடித்ததும், வேளாண் பொறியியல் கல்லூரியில் சேர்ந்தார்கள்.

தற்போது இருவரும் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிக்கிறார்கள்.

அரையாண்டு தேர்வு விடுப்பில் இருவரும் ஊருக்கு வந்திருந்தார்கள்.

பள்ளியில் படிக்கும் காலத்தில் இருந்தே இருவரும், அவர்கள் ஊரில் குளத்தருகிலுள்ள ஆலமரத்தடியின் கீழே அமர்ந்துதான் படிப்பார்கள். பொது விசயங்களைப் பேசிக்கொண்டு இருப்பார்கள்.

அன்றும் அப்படித்தான் அங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள்..

அப்போதுதான், அங்கே நடந்த நிகழ்ச்சியினைப் பார்த்தார்கள்.

ஒரு வண்டியிலிருந்த மூட்டைகளை இழுக்க முடியாது மாடுகள் இரண்டும் சிரமப்பட்டுக் கொண்டு இருந்த நிலையில், வண்டி ஓட்டி மாடுகளைப் போட்டு அடித்தார்.

"அடப்பாவமே... இந்த மாட்டை இப்படி அடிக்கிறாரே... ஏய் ஆனந்தா, அந்த வண்டியிலே இருக்கும் மூட்டைகளின் எடை எவ்வளவு இருக்கும்...?" கேட்டான், ஆதித்தன்.

"ஒரு டன்னிற்குக் குறையாது..." என்றான். "ஆனந்தன், அந்த வண்டியின் எடை எவ்வளவு இருக்கும்...?" கேட்டான், ஆதித்தன்.

"ஒன்றரை டன்னிற்குக் குறையாமல் இருக்கும்..." என்றான், ஆனந்தன்.

"ஆக, ஏற்றியிருக்கும் பொருளின் எடை ஒரு டன். வண்டியின் எடை ஒன்றரைடன் மொத்தத்தில் இரண்டரை டன் எடை... அதனால்தான் அந்த மாடுகள் இழுக்கக் கஷ்டப்படுகிறது... சாலை வேறு குண்டும் குழியாக இருக்கிறதால வண்டிச் சக்கரமும் உருள மறுக்கிறது.." என்றான், ஆதித்தன்.

"இதற்கு நாம் என்ன செய்யமுடியும்...?" கேட்டான், ஆனந்தன்.

"இதே வண்டியை மரத்தால் செய்யாமல் வேறு எடை குறைவான பொருள்களால் செய்தால் மாடு எளிதாக இருக்குமல்லவா...?" கேட்டான், ஆதித்தன்.

"நீ என்னடா சொல்றே?" கேட்டான், ஆனந்தன்.

"நான் என்ன சொல்றேன்னா... இதே மாட்டு வண்டியை சில்வரில் செய்தால் எப்படி இருக்கும்?" கேட்டான், ஆதித்தன்.

"நீ சொல்றது சாத்தியமாகுமா?" கேட்டான்.

"சாத்தியமாகும்!" என்றான், ஆதித்தன்.

"அப்படியா சொல்றே?" என்று கேட்டான், ஆனந்தன்.

"முதலில் ஒரு மாட்டு வண்டி செய்ய எவ்வளவு பணம்

செலவாகும்? அதைச் செய்ய எத்தனை நாளாகும்? ஒரு வண்டியில் எவ்வளவு எடை பொருள்களை ஏற்ற முடியும்... என்பதை எல்லாம் நாம் அறிந்து கொள்ள வேண்டும்..." என்றான், ஆதித்தன்.

"தெரிந்து கொண்டால்...?" கேட்டான், ஆனந்தன்.

"அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைச் சொல்கிறேன். வாடா..." என்றான், ஆதித்தன்.

"எங்கேடா இப்ப கூப்பிடுறே...?" கேட்டான், ஆனந்தன்.

"முதல்ல ஒருவண்டியை எந்தெந்த மரத்துல செய்யலாம். ஒரு வண்டி செய்ய எவ்வளவு நாள் ஆகும்; ஒரு வண்டியிலே எவ்வளவு வெயிட்டை ஏத்தலாம்; அது செய்ய எவ்வளவு ரூபாய் தேவை என்பதை எல்லாம் தெரிஞ்சுக்கணும்?" என்றான், ஆதித்தன்.

"இதை எல்லாம் யாருகிட்டே கேட்கிறது?" கேட்டான், ஆனந்தன்.

"ஐ.ஏ.எஸ். படிச்சவங்ககிட்டேயா கேட்கமுடியும்? ஒரு மரவேலை செய்ற ஆசாரியிடம்தான் கேட்கணும்... நம் தெருவுல இருக்கிற கலியமூர்த்தி ஆசாரியிடம்தான் இப்ப நாமபோய் கேட்கப் போறோம்... நீ வா..." என்றான், ஆதித்தன்.

இருவரும் ஆலமரத்திலிருந்து புறப்பட்டுப் போனார்கள். ஆசாரி வீட்டை நோக்கி...

ஆனந்தன் நண்பன் ஆதித்தன் சொன்னதுபோல் அவன் வீட்டிற்கு வந்தான்.

“உன்னைத்தாண்டா எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன்... வா... மாடிக்குப்போவோம்...” என்றான்.

இருவரும் அமைதியாக இருந்த மாடிக்குப் போனார்கள். “ஏய், எந்தெந்த மரத்துல மாட்டு வண்டி செய்யலாமுன்று ஆசாரி சொன்னாரு...?” கேட்டான், ஆதித்தன்.

“நாட்டுத்தேக்கு, நாட்டு கருவேலமரம், கொன்றை மரம், மலைவேம்பு போன்ற மரங்களில் செய்யலாமுன்று சொன்னாரு...” என்றான்.

“நாட்டுத்தேக்குல வண்டி செய்தா நல்லாயிருக்கும்... ஆனா... இந்த மரம் கொஞ்சம் அதிக விலையாகுமுன்னு சொன்னாருல்ல...”

“ஆமாம், நாற்பது ஆயிரம், முப்பதாயிரம் வரை ஆகுமுன்னு சொன்னாரு....” என்றான், ஆனந்தன்.

“ஒரு வண்டியை செய்து முடிக்க பதினைந்து நாள் ஆகும்... ஒன்றரை டன்னில் இருந்து இரண்டு டன் வரைக்கும் அதன் எடை இருக்கும்.... இரண்டு டன் வரைக்கும் பொருள்களை ஏற்றலாமுன்னும் சொன்னாரு இல்லையா?” என்று கேட்டான், ஆதித்தன்.

“ஆமாண்டா...” என்றான், ஆனந்தன்.

“சரி, நாம இப்ப என்ன செய்யனுமுன்னா.. மொத்த வியாபாரம் செய்ற எவர்சில்வர் கம்பெனிக்குப் போய் கேட்கணும்... வாங்கணும்...” என்றான், ஆதித்தன்.

“இதுக்கெல்லாம் பணம் வேணும் தெரியுமில்ல?” என்று சிரித்தபடியே கேட்டான், ஆனந்தன்.

“இதோ பாருடா... எங்க அப்பா கிட்டே விசயத்தை

விளக்கமா சொல்லிகேட்டா கொடுப்பாங்க..”

“அப்புறம் என்னடா... எங்க வீட்டிலேயும் நானும் கேட்டா கொடுப்பாங்க... அப்புறம் என்ன நம்ம ஊர்ல... ஓரம்போ ஓரம்போன்னு சொல்லிகிட்டே ஓட்ட வேண்டியதுதான் வண்டியை....” என்று ஆனந்தன் கூறியதும்... இருவரும் கலகலவென சிரித்தார்கள்.

“இப்படி நாம வண்டி செய்றதால என்ன பலன் கிடைக்கும்?” கேட்டான், ஆனந்தன்.

“நல்லா கேட்டே போடா... ஒரு வண்டி செய்ய ஒரு மரம் தேவைப்படுது இல்லையா... அது இல்லாது போகும் இல்லையா?”

“நீ அங்கே வர்றீயா, சரிசரி” என்றான்.

“நாம செய்யப்போற இந்த செயலைப் பார்த்து ஊர் மக்கள் கேலிகூட செய்வாங்க... அதைப் பத்தி நாம கவலைப்படக் கூடாது...”

“நம்ம நாட்டுல புதுசா எதைச் செய்தாலும் மக்கள் அப்படி சொல்றது வழக்கும்தானே... அதை விடு. அடுத்து நாம என்ன செய்யனுங்கிறதைப்பத்தி யோசிப்போம் - செயல்படுவோம்...” என்றான், ஆனந்தன்.

“சரிவாடா... பணத்துக்கு ஏற்பாடு செய்வோம் - இருவரும், எவர்சில்வர் வண்டிக் கனவோடு, மாடியில் இருந்து இறங்கினார்கள்.

ஆதித்தனும், ஆனந்தனும் இரவு பகலாக பாடுபட்டு சில்வரில் வண்டியை செய்து முடித்தார்கள்.

“இன்னைக்கு உங்க வயலில் அறுவடைதானே...” கேட்டான், ஆதித்தன்.

இதோ பார், களத்து மேட்டிலே இருந்து நெல் மூட்டைகளை மாட்டு வண்டியில்தானே ஏற்றி வருவாங்க...

அந்த மூட்டைகளை இன்னைக்கு நம் சில்வர் வண்டியிலே ஏத்திக்கிட்டு வருவோம்...” என்றான், ஆதி...

“முதல் கஸ்டமர் நமக்கு நெல் மூட்டை, நல்ல ஐடியா...”

“சரி, மாட்டை ஓட்டிகிட்டு வா, நம் வண்டியிலே பூட்டி களத்து மேட்டுக்குப் போவோம்...”

வீட்டின் முன்னே நின்றிருந்த எவர்சில்வரால் செய்யப்பட்டிருந்த வண்டியை ஊரில் உள்ளவர்கள் அதைச் சுற்றிச் சுற்றி வந்து பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

“படிக்கிற பசங்கல்ல,அதான் புத்தியோட இதை செய்து இருக்காணுங்க...” என்று கூட்டத்தில் இருந்த பெரிசு ஒண்ணு பேசியது..

“இப்ப பாக்கிறதுக்கு பளபளன்னுதான் இருக்கும்.... இதுல பத்து மூட்டையை ஏத்தி ஓட்டும்போதுதானே அச்சு முறியுதா, ஆரக்கால் உடையுதான்னு தெரியும்...” என்று கிண்டலடித்தார், ஒருவர்.

“கிண்டலா பேசாதப்பா , அவுங்க முயற்சியைப் பாராட்டாட்டாலும் இதுபோல பேசாதே...”

இவர்களின் பேச்சுகளை எல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல், இருவரும் வண்டியைப் பூட்டி ஓட்டத் தொடங்கினார்கள்.

சில்வர் வண்டி அழகாக உருண்டு போவதைப் பார்த்து பலர் வியப்போடு நின்றிருந்தார்கள்...

“எப்படியோ, ஓர் உயிர் உள்ள மரம் வெட்டப்படாமல் காக்கப்பட்டது..” என்று ஒருவர், சொல்லியபடியே எவர்சில்வர் வண்டியைத் தொடர்ந்து நடந்து போனார்...

6

கன்றுகள், கன்றுகள் நட்டன...

உமையாள்புரம், இயற்கை எழில் கொஞ்சும் கிராமம். இந்த ஊரில்தான் ஒதுக்குப்புறமாக இருந்தது, அந்தப் பள்ளி, ஐம்பது ஏக்கர் நிலத்தின் நடுவே அழகாக அமைந்து இருந்தது.

பள்ளி அமைந்த இடம்போக, பல ஏக்கர் நிலம் தரிசு நிலமாகவே கிடந்தது...

இப்பள்ளியின் தலைமையாசிரியராக செல்வராஜ் இருந்தார். இவர் பாரம்பரியம் மிக்க விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

இவரின் தாத்தா, அப்பா, அண்ணன், தம்பி எல்லோருமே வீட்டில் இருப்பதைவிட, தங்கள் விலை நிலங்களில் எந்த இடத்தையாவது தோண்டிக் கொண்டு இருப்பார்கள்.

அதாவது, எந்தச் செடி, கொடிகளையாவது நட்டுக்கொண்டு இருப்பார்கள். ஒரு அடி நிலங்களைக் கூட வீணில் போட்டு வைக்க மாட்டார்கள்..

இந்தக் குடும்பத்தில் ஒருவர்கூட பள்ளிக்கூடப் பக்கமே போனது இல்லை. இந்த நிலையில் செல்வராஜ் மட்டுமே

படித்தவர்; பட்டம் பெற்றவர்; இன்று இந்தப் பள்ளியில் பணியும் ஆற்றுகிறவர்.

இவரிடம் ஒரு பழக்கம் உண்டு.... பள்ளி விட்டு எல்லோரும் அவரவர் வீட்டிற்குச் சென்றதும், அப்பள்ளியைச் சுற்றியுள்ள காலி இடங்களில் நடைபயிற்சி செல்வது வழக்கம்.

அன்றும் அப்படித்தான் நடைபயிற்சி செய்துகொண்டு இருந்தார். இப்படி காலியாக கிடக்கும் நிலங்களை நம் அப்பா பார்த்தால் என்னவாக மாறும்? இப்படி இவர் நினைக்கக் காரணமிருந்தது...

ஆசிரியர் செல்வராஜின் குடும்பமே பாரம்பரியமாக விவசாயத்தில் ஈடுபட்டு வரும் குடும்பமாகும்.

அதனால்தான் அப்படி நினைத்தார்... அது குறித்து சிந்திக்கவும் செய்தார்... பல முறை சிந்தித்தவர் ஒரு முடிவுக்கும் வந்தார்.

ஆசிரியர் செல்வராஜ், எப்போதும் பள்ளியின் வளர்ச்சிக்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும் பாடுபட வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் நினைப்பவர்.

அதனால்தான் சென்ற வாரம் அந்த ஊரில் இரத்ததான முகாம் நடந்தபோது, தான் பணியாற்றும் பள்ளியில் இருந்து நாற்பது மாணவர்களை அங்கு நடந்த பணியில் தொண்டு செய்ய அனுப்பி வைத்தார்.

இதே போல் சென்ற மாதம் பக்கத்து ஊரில் நடந்த கண்தான முகாமிற்கு ஐம்பது மாணவர்களை அனுப்பி வைத்திருந்தார். பள்ளியைச் சுற்றி நடைபயிற்சி செய்து முடித்து ஓர் இடத்தில் நின்றவர், அங்கே இருந்த காலி இடங்களை மீண்டும் பார்த்தவரின் சிந்தனை மேலும்

வளர்ந்தது. நீண்ட நேரத்திற்குப்பின், அவர் சிந்தனை முழுதும் பசுமையோடு நிறைந்தது.

'அப்படியே செயல்படுவோம்' என்ற முடிவோடு அங்கு இருந்து வீட்டை நோக்கி நடந்தார்.

பள்ளி தொடங்குவதற்கு முன் நடந்த இறைவணக்கப் பாடலுக்குப்பின், தலைமையாசிரியர் பேசத்தொடங்கினார்.

"எல்லோருக்கும் வணக்கம்... உழைக்காமல் ஒரு மனிதன் இருந்தால் அது எப்படி அவனுக்கும், சமுதாயத்திற்கும் நல்லது இல்லையோ, அதேபோல் விளைச்சல் நிலம் இருந்தும், அதில் பயிர் செய்யாமல் இருப்பது நாட்டிற்கும், மக்களுக்கும் நல்லதல்ல.

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நம் பள்ளியைச் சுற்றி இருக்கும் நிலங்களில் ஏதேனும், நாட்டின் வளத்திற்கு வேண்டிய பயிர்களை செய்யலாம் என்று நினைக்கிறேன்..

அதற்கு நீங்கள் எல்லாம் உதவ ஒப்புதல் தருவீர்களா?" தந்தால் என் எதிர்கால எண்ணத்தைக் கூறுகிறேன்.

"கூறட்டுமா.... கூறட்டுமா?" என்று உரத்தகுரலில் கேட்டார்...

"கூறுங்கள் ஐயா... கூறுங்கள் ஐயா..." என்று ஆர்வத்தோடு குரல் எழுப்பினார்கள், மாணவர்கள்.

அதைக்கேட்ட ஆசிரியர், மகிழ்ச்சியோடு தன் எண்ணத்தைக் கூறத் தொடங்கினார்.... ஆசிரியர்களும் ஆர்வமாக கேட்க காத்திருந்தார்கள்.

"என் இலக்கு, இந்த மாத இறுதிக்குள் ஐந்நூறு மரக் கன்றுகளை நட வேண்டும் என்பது....

ஒவ்வொரு மாணவரும் தங்கள் வீட்டில் இருந்தோ, கடைகளில் வாங்கியோ வரவேண்டும்...

தாங்கள் கொண்டு வரும் கன்றுகளை ஏனோதானோ வென்று கண்ட கண்ட இடங்களில் நட்டு விடக்கூடாது.

வரிசை வரிசையாக குழிதோண்டிய இடங்களில் மட்டுமே நடவேண்டும். ஒரு முனையில் இருந்து பார்த்தால் மறுமுனை வரை ஒழுங்கான நேர்க்கோட்டில் இருக்கும்படி நட வேண்டும். உங்கள் எல்லோரையும் ஆசிரியர் பெருமக்கள் வழி நடத்துவார்கள்.

மரக்கன்றுகளை நடுவதோடு உங்கள் பணி முடிந்து விட்டதாக எண்ணிவிடக்கூடாது.

ஒவ்வொரு-நாளும் நீங்கள் நட்ட கன்றுகளுக்கு தண்ணீர் விட்டு பாதுகாக்க வேண்டும்.

அவ்வாறு வளர்த்து வருபவர்களுக்கு ஆண்டு இறுதியில், யார் வளர்த்த மரக்கன்று சிறப்பாக வளர்ந்து இருக்கிறதோ அவர்களுக்கு, நம் பள்ளியின் சார்பில் சிறப்பு பரிசு வழங்கப்படும்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் பள்ளி முடிந்ததும், வழக்கம் போல் அவரவர்களின் மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றிய பின்னேதான் வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

உங்களை எல்லாம் அந்த வேளையில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் துணையாக இருந்து கவனித்துக் கொள்வார்கள்.

நாளை முதலே இந்த சிந்தனையில் நாம் எல்லோரும் செயல்படத் தொடங்க வேண்டும்... என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்... வணக்கம். நன்றி!.. என்று தலைமை ஆசிரியர் பேசி முடித்ததும், எல்லோரும் அமைதியாக கலைந்து போனார்கள்...

இப்பள்ளியில் மாணவர்களே மரக்கன்றுகளை நட்டு பாதுகாத்து வளர்ப்பதை அறிந்த, மாநில பசுமை வரை பராமரிப்பு நிறுவனம் கேள்விப்பட்டு, அங்கிருந்து அதிகாரிகள் பள்ளிக்கு வந்தார்கள்.

தலைமை ஆசிரியரைச் சந்தித்து, அவரைப் பாராட்டினார்கள். பின் மாணவர்கள் வளர்த்த மரக்கன்றுகளை எல்லாம் பார்வையிட்டார்கள்; பாராட்டினார்கள்.

அவர்களின் பாராட்டினை கேட்ட ஆசிரியர், "தங்களின் பாராட்டுகள் அனைத்துமே முழுக்க முழுக்க மாணவர்களுக்கே உரியது... ஆகவே, தங்களின் கருத்துகளை எல்லாம் பள்ளி மாணவர்களின் முன்னே கூறினால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்..." என்றார், செல்வராஜ்.

அதன்படியே, பிரேயர் ஹாலிற்கு மாணவர்கள் அனைவரையும் வரவழைத்து கூறினார்கள்...

"எல்லோருக்கும் வணக்கம்... நாட்டின் வளர்ச்சிக்காக இப்பள்ளியின் மாணவர்கள் ஆற்றியுள்ள செயல்பாடு போற்றத்தக்கதாகும். இப்பள்ளியின் மாணவர்கள் உருவாக்கியுள்ள மரக்கன்றுகளே இந்த ஆண்டில் முதல் பரிசினைப் பெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்..." என்று கூறினார்கள்.

அவர்கள் பாராட்டினைக் கேட்ட, மாணவர்களின் மகிழ்ச்சி - கை ஓலியாக அரங்கை நிறைந்தது...!

7

பாதிப் பாதியாக...

“டே நீ என்ன சொன்னாலும் விட மாட்டேன். அதை அழிச்சே ஆகணும்...”

“அது இருக்கிறதாலே எனக்கோ, உங்களுக்கோ எந்த தொந்தரவும் இல்லியே.... அப்படி இருக்கும்போது, ஏன் அதை அழிக்கணும்?

அது நம்ம ரெண்டு பேருக்கும் பொதுவாதானே இருக்கு... அப்படி இருக்கும்போது அதை நீங்க எதுக்கு விக்கனுமுன்னு சொல்றீங்க...?”

“எனக்குப் பணம் வேணும்...

“நாளைக்கே விலைபேசி கொடுத்துட்டு பணம் கொடு...”

“அது எப்படி அண்ணே.... இத்தனை வருஷமா இருந்த அதை அழிக்கச் சொல்றீங்களே...”

“அப்ப, அது பட்டு போனதுக்கு அப்புறம்தான் எனக்குப் பணம் கொடுப்பியா?”

“அப்படி நான் சொல்லலியே....”

“வேணுமுன்னா இன்னைக்கே நான் அதுல சுடு தண்ணியை ஊத்தி முடிச்சிடவா?”

“மனிதத் தன்மையே இல்லாம ஏன் பேசுறீங்க?”

“ஏய், மனிதத் தன்மையும், மண்ணாங்கட்டித் தன்மையும் எனக்கு வேணாம்... இப்ப எனக்குப் பணம் தான் வேணும், புரியுதா...?”

இதுவரை நீங்க மேல படிச்சது என்னான்னு புரியலேயா... வேற ஒண்ணுமில்லிங்க...

ஒரு அண்ணன் தம்பிக்குள் நடந்த பிரச்சனைதான்... என்ன பிரச்சனை?... அதை நீங்களே தொடர்ந்து படிச்சிக்கங்களேன்....

குருமூர்த்தியும், குருசாமியும் அண்ணன் தம்பிங்க... இவர்களுக்கு பெற்றோர், சமஅளவில் வீட்டுமனையை கொடுத்து இருந்தார்கள். அதில் இருவருமே தனித்தனியே வீட்டைக் கட்டிக் கொண்டார்கள். வீட்டைக் கட்டிக் கொண்டதில் எந்தவிதப் பிரச்சனையும் இல்லை...

வீட்டுக் கொல்லையில், காக்கை எச்சத்தில் விழுந்த மகிழம் விதை, இப்போது பெரிதாய் வளர்ந்து நிற்பதே பிரச்சனையாக, இவர்களுக்குள் எழுந்து நிற்கிறது...

அந்த மரத்தின் கீழேதான், இருவர் வீட்டுக் குழந்தைகளும் விளையாடுவார்கள். மகிழம் பழம் பழுக்கும் காலங்களில் கீழே விழும் பழங்களை எடுத்து சுவைத்து சாப்பிடுவார்கள்.

வெயில் நேரத்தில் இருவர் வீட்டு மாடுகளையும் அந்த மரத்தின் அடர்நிழலில்தான் கட்டி வைப்பார்கள்.

அமைதியாய் இப்படி நின்று பலவிதத்தில் பலன் தந்துவரும் அந்த மரத்தைப் பற்றி என்ன நினைத்தாரோ குருசாமி - ஒருநாள் இந்த மரம் எனக்குச் சொந்தமானது... நான் அதை வெட்டி விற்கப்போகிறேன்.... என்று சொன்னதும்...

“அண்ணே... இந்த மரம் நம்ம ரெண்டுபேர் நிலத்திலேயும் இருக்கு... அதனால, அது உங்களுக்கு மட்டும் சொந்தமுன்னு சொல்றது தப்பு அண்ணே!” என்றார் தம்பி, குருமூர்த்தி.

“இல்லடா, அது என் நெலத்துலதான் இருக்கு... நாளைக்கே நான் வெட்டப்போறேன்....” என்றார், குருசாமி.

“அண்ணே... அது யார் நெலத்துல இருக்குன்னு நாம ஏன் அண்ணே சண்டை போட்டுக்கனும்.... ஊர் கணக்கப் பிள்ளைய கூட்டி வந்து நெலத்தை அளக்கச் சொல்வோம்... அந்த மரம் உங்க நெலத்தில இருந்தா அதை நீங்க எடுத்துக்கங்க...” என்றார், தம்பிகுருமூர்த்தி.

“நீவேணா கணக்கப்பிள்ளையைக் கூட்டி நிலத்தை அளக்கச் சொல்லு....” என்றார், அண்ணன் குருசாமி.

அடுத்த நாளே அழைத்து வந்தார், குருமூர்த்தி.

வந்த கணக்குப்பிள்ளை நிலத்தை அளந்து பார்த்து விட்டு...” இங்கே பாருங்க... இந்த மரம் உங்க ரெண்டுபேர் நிலத்திலேயும் பாதி பாதி இருக்கு!” என்று சொல்லி சென்று விட்டார்.

“கணக்கப்பிள்ளை சொன்னது காதுல விழுந்துச்சில்ல... உடனே மரத்தை வெட்டி வித்துட்டு என் பங்கைக்கொடு...” என்று கண்டிப்பாகப் பேசினார், அண்ணன் குருசாமி.

“ஏன் அண்ணே மரத்தை வெட்டு வெட்டுன்னு சொல்றீங்க...? அதுக்கும் உயிர் இருக்குள்ள... நம்ம பிள்ளைங்கள நாம வெட்டுவோமா அண்ணே....?”

“எல என்ன திமிருடா உனக்கு? என் ஒரே பிள்ளையை வெட்டவா... சொல்ற?” கோபத்தில் நின்றார், குருசாமி.

“நான் அப்படி சொல்லல அண்ணே....”

“வேற எப்படிடா சொன்ன? ஏய் மரகதம் இங்கே வாடி... இவன் நம்மப் பிள்ளையை வெட்டச்சொல்றாண்டி என்னான்னு வந்து கேளுடி...”

“அவரு சொன்னதுல என்ன தப்பு. அவரு சரியாதான் சொன்னாரு... அதுவும் ஒரு உயிர் தானே... ரெண்டு நாளா நீங்க பண்ற அடாவடித்தனத்தை நான் பாத்துகிட்டுதான் இருக்கேன்.

அதுசரி, அந்த மரம் உங்கள என்ன பண்ணுது... அவருயாரு? உங்க கூட பொறந்த தம்பிதானே... அவரு உண்டு. அவரு வேலை உண்டுன்னு இருக்காரு... அவருகிட்டே ஏன் ஏதாவது தகறாரு பண்ணிகிட்டே இருக்கீங்க?

இந்த மரத்தைப்போல, ரெண்டு பேரு நெலத்திலேயும்தான் கிணறு இருக்கு. அதை முதல்ல மண்ணைப் போட்டு மூடிடுங்க... அதுக்கு அப்புறம் இந்த மரத்தை வெட்டுறதைப் பத்தி முடிவு செய்யலாம்“ என்று படபட வென்று பேசிவிட்டு, மரகதம் அங்கிருந்து கோபமாகச் சென்றாள்...

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு இருப்பதைப்போல மகிழமரம் மகிழ்ச்சியோடு தலையை ஆட்டிக்கொண்டு நின்று இருந்தது.

8

நான் தன்னனி ஊத்துறேம்மா...

பள்ளி விட்டதும், அவரவர் தோழிகளோடு வீட்டை நோக்கி மாணவிகள் நடந்து கொண்டு இருந்தார்கள்.

மேரி, ஜாஸ்மின், தமயந்தி மூவரும் தோழிகள். இவர்கள் பேசிக்கொண்டே வீட்டை நோக்கி நடந்து கொண்டு இருந்தார்கள்.

"ஏய், மிஸ் சொன்னதுபோல நேற்றே நான் எங்க அப்பாவிடம் சொல்லி எங்கள் வீட்டுக்குப்பின் இருந்த இடத்தில் மல்லிசெடி, ரோஜா செடிகளை வாங்கிவரச் சொல்லி நட்டுவிட்டேன். அழகா இருக்குடி...." என்றாள், மேரி.

"நானும், எங்க அப்பாகிட்டே வாங்கிவரச் சொல்லிட்டேன்..."

இன்று செவ்வந்திச் செடியும், முல்லைச் செடியும் வாங்கி வருவாங்க... என்றவள்,

"எதுக்கடி, மிஸ் வீட்டில் செடி வளர்க்கச் சொல்றாங்க..." என்று கேட்டாள், ஜாஸ்மின்.

"வீட்டில் செடி, கொடிகளை வளர்த்தால் வீடு அழகாக

இருக்கும். இருபது சதவீதம் ஒலியைக் குறைத்து நமக்கு நன்மையைத் தரும். சுத்தமான காற்று கிடைக்கும். சுற்றுப்புறமும் தூய்மையாகுமுன்னு டி.வி. யிலே நேற்று காலையிலே சொன்னாங்க..

அதுனாலதான் இருக்குமுன்னு நினைக்கிறேன். எப்படி இருந்தாலும், நல்லதற்குத்தானே சொல்லி இருக்காங்க மிஸ்..." என்றாள், தமயந்தி.

"அது சரிடி... நீ உன் வீட்டில் என்ன செடிகளை நடப்போகிறாய்...?" கேட்டாள், மேரி.

"உங்களுக்கெல்லாம் சொந்த வீடுகள் இருக்கு... உங்க அப்பாவெல்லாம் பணக்காரவங்க... எங்க அப்பா கூலி வேலை செய்றவங்க... எங்க அம்மாவும் வீட்டு வேலை செய்றவங்க... நாங்க இருக்கிறதோ.. வாடகை குடிசையிலே..."

"குடிசையா இருந்தாலும், மண் தொட்டியிலே வைக்கலாமுன்னு மிஸ் சொன்னாங்க இல்ல..." என்றாள், ஜாஸ்மின்.

"வைக்கலாம்தான்... எங்க அப்பாகிட்டே சொல்றேன்... வாங்கித்தந்தா நானும் ஒரு செடியை நடுறேன்..." என்றாள், தமயந்தி.

"நீ என்ன செடி நடப்போற... பட்டுரோஜா வா. கனகாம்பரச் செடியா?" கேட்டாள், மேரி.

"தெரியலியே.... " என்றாள், தமயந்தி.

இதற்குள் அவரவர்கள் வீடுவர மூவரும் பிரிந்து போனார்கள்.

மிஸ் சொன்னதையும், தோழிகள் அதன்படி செய்து இருப்பதையும் தன் அப்பாவிடம் சொன்னாள், தமயந்தி.

"அம்மா, உனக்கு பூவேனா வாங்கித்தர்றேன்.... பூந் தொட்டி எப்படி வாங்குறது? ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் ஆகுமே.. என் கிட்டே அவ்வளவு பணம் ஏதும்மா?"

“உங்களுக்கு குடிக்க பணமிருக்கும்? இதுக்கு எல்லாம் பணம் எப்படி இருக்கும்?” என்று கேட்டபடியே வீட்டுக்கு முன்னே உட்கார்ந்து அழத் தொடங்கினாள். எட்டாவது படிக்கும், தமயந்தி.

பல வீடுகளில் வேலை செய்துவிட்டு கலைப்போடு வீட்டுக்குத் திரும்பி வந்த அலமேலுக்கு, தன் வீட்டின் முன் அமர்ந்து அழுது கொண்டு இருந்த மகள் தமயந்தியைப் பார்த்ததும், துடிதுடித்த படியே ஓடிவந்த தாய் ” என்னம்மா ஆச்சு... பசிக்குதா?” என்று கேட்டாள்.

“இல்ல...”

“யாராச்சும் திட்டினாங்களா? அடிச்சாங்களா?” கேட்டாள், தாய்.

“இல்ல...”

“பின்னே என்னதாம்மா நடந்துச்சு? சொல்லும்மா...” நடந்த எல்லாவற்றையும் அழுதபடியே சொன்னாள், தமயந்தி.

“அந்தக் கூறு கெட்ட மனுசனுக்கு என்ன தெரியும்... நான் இருக்கேன்... நீ அழுவாதே.. கண்டிப்பா வாங்கித் தர்றேன்...

“வாங்கித்தருவேடி... தருவே... நூறு ரூபாய் ஆகும். எப்படி வாங்கித்தருவே?

“அம்மா... என்னம்மா இது...?”

“அந்தக்குடிகார மனுசன் கிடக்கிறாரு... நீ செடி நடணும் அவ்வளவுதானே.. நான் பாத்துகிறேன்.. நாளைக்கு நீ ஸ்கூல்ல இருந்து வர்றதுக்குள்ள நீ நெனச்சது நடக்கும்...” என்றுதான் சொன்னதைக் கேட்டதும், அமைதி அடைந்தாள், தமயந்தி.



பள்ளிவிட்டு வழக்கம்போல், மேரி, ஜாஸ்மின், தமயந்தி மூவரும் வீட்டுக்கு பேசிக்கொண்டே வந்தார்கள்.

"நான் நட்ட ரோஜா செடியிலே அடுத்த வாரம் மொட்டு வந்திடுமாம்.... எங்க மாமா சொன்னாங்க..."

"அப்படியா...?" என்றாள். ஜாஸ்மின்.

"மொட்டு வந்ததும் எங்களை அழைச்சிகிட்டுப்போய் காட்டுறீயா? கேட்டாள், தமயந்தி.

கண்டிப்பா அழைச்சிகிட்டுப் போறேண்டி... அது சரி, நீ உன் வீட்டுல செடி நட்டுட்டியா? கேட்டாள், மேரி.

அமைதியாக இருந்தாள், தமயந்தி.

"ஏண்டி அமைதியா இருக்க; என்ன ஆச்சி?" ஜாஸ்மின்.

"அப்படியா... சரி... நாளைக்குச் சந்திப்போம்..." என்றபடியே மூவரும் பிரிந்து அவரவர் வீட்டிற்குச் சென்றார்கள்.

தனியே நடந்து வந்த தமயந்திக்கு... அம்மா சொன்னதுபோல பூந்தொட்டி வாங்கி வந்து இருப்பாங்களா? அந்தத் தொட்டியிலே என்ன செடியை நாம வைக்கிறது? என்ற சிந்தனை வந்து கொண்டு இருந்தது.

"அம்மா என்ன இது?" கேட்டாள், தமயந்தி.

அவள்தாய், அவர் வேலை செய்யும் வீட்டில் உடைந்து கிடந்த ஒரு குடத்தை எடுத்து வந்து, அதன் கழுத்தை வெட்டி, தொட்டி போல் ஆக்கி, அதனுள் மண்ணைப் போட்டு நிரப்பிக் கொண்டு இருந்தார்...

மகளைப் பார்த்ததும், "வாடிக்கண்ணு வா..." என்றார்.

"என்னம்மா இது..."

"இதோ பாரு கண்ணு.. பூந்தொட்டி கீழே விழுந்தா உடைஞ்சிடும். இது உடையாது... தொட்டி வெல கேட்டம்மா... 75 ரூபாய்க்கும் 100 ரூபாய்க்கும் இருக்குது... இந்த அளவுக்கு அது பெரிசு இல்ல... இது ரொம்ப நாளைக்கு உழைக்கும்..."

"சரி பரவாயில்லம்மா நல்லாதான் இருக்கு. நீங்க சொல்றதும் சரிதான். இதுல என்ன செடி வைக்கிறதும்மா?"

"அந்தக் கவலை உனக்கு வேணாங்கண்ணு... அடுத்தத் தெரு மாமா கோவிந்து அவுங்கக் கொல்லையிலே நட கத்தரிச் செடி வாங்கி வந்துச்சி... அதுல ஒரு கன்னை வாங்கியாந்து இருக்கேன். குரோட்டன்ஸ் போல வீணான செடிகளை நடுறதுக்கு பதிலா இதை நட்டாலும் ஒரு நாளைக்கு குழம்பாகும்..."

"நீ சொல்றதும் சரிதாம்மா..."

"கண்ணு, கத்தரிக் கன்னை ஒரு பேப்பர்ல சுத்தி உள்ளே வச்சியிருக்கேன். எடுத்திட்டுவா..." என்றதும் உள்ளே ஓடிச்சென்று எடுத்து வந்து தாயிடம் கொடுத்தாள்.

அதை வாங்கிய தாய், பிளாஸ்டிக் குடத்தில் இருந்த மண்ணில் குழியைத் தோண்டி நட்டார். பின் அதில் தண்ணீர் ஊற்ற, உள்ளே சென்று, ஒரு செம்பில் தண்ணீரை எடுத்து வந்து ஊற்றப்போன தாயின் கையில் இருந்த செம்பை வாங்கி, "அம்மா, இந்தச் செடிக்கு நான் தண்ணி ஊத்தறேம்மா...."

"அப்படியா... ஊத்தும்மா..."

கத்தரிக்கன்னுக்கு தண்ணீர் ஊற்றினாள் தமயந்தி.

தொட்டியில் இருந்த மண்ணும், செடியும் குளிர்ந்து போனதோடு தமயந்தியின் மனமும் அங்கே மகிழ்ந்து போனது... நிறைந்துபோனது.

9

பிரசாதம்

படிப்பறிவையும், பட்டறிவையும் பிறருக்குப் பயன்படச் செய்வதே தான் இலட்சியமாகக் கொண்டதால், இளமையிலேயே இல்லறம் துறந்தார்; காவியை அணிந்தார்.

அதனால், எப்பொழுதும் ஊர் ஊராகச் சென்று கொண்டு இருப்பார்; நல்ல கருத்துகளை மக்களிடம் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருப்பார்.

அப்படித்தான் ஒருநாள் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு எப்போதும் போல் தனியே சென்று கொண்டு இருந்தார்; நாற்பது வயது நிரம்பிய குருஜி. அவரின் பக்தர்கள் அவரை அப்பெயரைச் சொல்லிதான் அழைப்பார்கள்.

சித்திரை வெயில்.. உடல் முழுதும் வியர்வை வழிந்து ஓடியது. தலை வெடித்து விடும்போல் இருந்தது, குருஜிக்கு.

இனியும் இந்த சூட்டில் நடக்க முடியாது.... எங்காவது ஒரு மர நிழலிலே சிறிது நேரம் ஓய்வு எடுத்து, பின் பயணத்தைத் தொடரலாம் என்று நினைத்தவர், வந்த சாலை ஓரம்மரம் ஏதேனும் தென்படுகிறதா என்று கண்ணுக்கு எட்டிய தூரம் வரைப் பார்த்தார். ஒரு மரம் கூட தென்படவில்லை.

நாம் பயணம் செய்த எந்த ஊரிலும் இப்படி ஒரு

கொடுமை இல்லையே என்று மனதால் நொந்துபோனார்.

"நாம் பட்ட இந்தத் துன்பத்தை யாரும் படக்கூடாது..." என்று நடந்து கொண்டே சிந்தித்தார்... இந்த சிந்தனையையே தன் வாழ்நாள் இலட்சியமாக இதயத்தில் பதித்துக் கொண்டார்.

இந்த வேளையில் கார் ஒன்று அவர் எதிரே வந்து கொண்டு இருந்தது.

புழுதியை சாலை முழுதும் வாரி இறைத்துக் கொண்டு வந்த அந்தக் கார், அவரின் அருகில் வந்ததும் நின்றது...

காரில் இருந்து இறங்கியவர், "குருஜி வணக்கம்..." என்றார்.

அவர் பெயர், சகாதேவ். அந்த ஊர் ஜமீன்தார். அவர் யார் என்று அறிய முடியாதவராய் இருந்த குருஜி, "வணக்கம், வாழ்த்துகள்...." என்றார்.

"குருஜி, இதுதான் என் ஊர்... வாருங்கள் என் வீட்டிற்குப் போகலாம்..." என்று அழைத்தார், பணிவோடு.

குருஜி அமைதியாக நின்றிருந்தார்.

"குருஜி, ஏன் தயங்குகிறீர்கள்? நான் தங்களை அறிவேன். தங்களின் சொற்பொழிவுகளையும் நல்ல செயல்பாடுகளையும் பல ஊர்களில் கேட்டு இருக்கிறேன்...

"கேட்ட அன்றிலிருந்தே நான் தங்களின் சீடனாகி விட்டேன்... தயவு செய்து என் வீட்டில் தங்களின் பாதம்பட வேண்டும் என்று விரும்புகிறேன். தாங்கள் இந்த சீடனின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்களா?"

"அன்பரே... உன் விருப்பப்படியே நடக்கட்டும்..."

மகிழ்ச்சியோடு ஜமீன்தார், காரின் கதவைத் திறந்து விட்டார்...

காரை இயக்க ஆரம்பித்தார்... கார் புறப்பட்டது.

சிறிது நேரப்பயணத்திற்குப்பின், கார் ஒரு பெரியமாளிகையின் முன்னே வந்து நின்றது.

வந்தக் காரின் கதவைத் திறக்க, ஒவ்வொரு பக்கத்தில் இருந்தும் ஓர் ஆள் ஓடி வந்து பணிவோடு கார் கதவைத் திறந்து விட

"குருவே வாருங்கள்...." என்று மகிழ்வோடு அழைத்தார், ஜமீன்தார்.

அழைத்த அன்பரின் வீட்டையும் இல்லை மாளிகையையும், அதன் முன் நின்றிருந்த மனிதர்களையும், அங்குமிங்கும் நடந்து பணிகளைச் செய்து கொண்டிருந்த ஆட்களையும், பல வண்ண நிறங்களில் அங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த வெளி நாட்டுக் கார்களையும் பார்த்தபடியே நின்றிருந்த குருஜியை...

அன்போடு வீட்டிற்குள் அழைத்து வந்து ஒரு இருக்கையில் அமரச் செய்து விட்டு...." குருஜி தாங்கள் அருந்த என்ன கொண்டு வரவேண்டும்..." என்று அன்போடு கேட்டார், ஜமீன்தார்.

"வெயிலின் கொடுமையால் நா வறட்சியாக இருக்கிறது, மோர் கிடைத்தால் நல்லது..."

ஜமீன்தார், அங்கு நின்றிருந்த ஒரு பணியாளரைப் பார்க்க, குறிப்பறிந்த அந்தப் பணியாளர் அடுத்த நொடியே அங்கில்லை.

"குருஜி... மன்னிக்க வேண்டும்..." என்று அங்கிருந்து நடந்தவர் பணியாளர் ஒருவரை அழைத்து, "குருஜி இங்குதான் தங்கப்போகிறார்கள்... ஏற்பாடு செய்..." என்று கூறியதும் அவர் அங்கிருந்து விரைந்து விருந்தினர்கள் தங்குமிடத்திற்குப் போனார்...



இதற்கிடையில், குருஜி மோரை அருந்தி தன் கலைப்பைப் போக்கிக் கொண்டார்.

“குருவே வாருங்கள் போகலாம்....” என்று ஜமீன்தார் அழைத்ததும் எங்கே, எதற்கு என்று கேட்காமல், அவர் பின்னே சென்றார்...

விருந்தினர் தங்குமிடத்தில் இரண்டு பணியாளர்கள் வெளியில் நின்று குருஜியை வணங்கிவரவேற்றனர்.

“வாழ்க...” என்றவர், அழகிய அந்த தங்குமிடத்தை ஒருமுறை ஆழ்ந்து இரசித்துப் பார்த்தார், குரு.

“குருவே, இப்படி அமருங்கள்....” என்று ஒரு சோபாவைக் காட்டவும், தன் தோள் மீது தொங்கிக் கொண்டு இருந்தத் துணிப்பையை அங்கே ஓர் ஓரமாக வைத்துவிட்டு அமர்ந்த குருவிடம் பணிவாக தங்களின் தேவை என்ன என்பதைக் கூறினால், அதைச் செய்யக் காத்திருக்கிறேன்..” என்றார் ஜமீன்தார்.

“அன்பரே... என் தேவைகள் குறைவு... நம் நாட்டிற்கும், மக்களுக்கும் தான் மிகுதியாகத் தேவைப்படுகிறது என்றார்... குருஜி.

“குருவே, அடியேனுக்குப் புரியவில்லையே...”

“காலம் கனியும்போது புரியும்படி சொல்கிறேன். நான் இப்போது தனிமையில் இருக்க விரும்புகிறேன்..” என்றார், குரு.

“நல்லது, நான் வருகிறேன்...” என்று விடை பெற்றுச் சென்றார், சகா தேவ் ஜமீன்தார்.

அவர் சென்றபின், உடலைத் தூய்மை செய்துவிட்டு, யோகா செய்யத் தொடங்கினார், குரு.

மறுநாள் காலை....

குருவின் முன்னே பணிவோடு நின்றிருந்தார், ஜமீன்தார்...

"அன்பரே... உமது அன்பிற்கும், எதிர்பாராத உன் உதவிகளுக்கும் நன்றி. வாழ்த்துகள்.... நான் என் பயணத்தை வழக்கம்போல் தொடங்குகிறேன்..! என்றார். குரு.

அதைக்கேட்ட ஜமீன்தார், "குருவே, என்னை மன்னிக்க வேண்டும்...

தங்களின் சிந்தனைகளையும், விழிப்புணர்வு கொண்ட சொற்ப்பொழிவுகளையும், ஊர் ஊராகச் சென்று தாங்கள் கூறிவருவதை நான் அறிவேன்.

தங்கள் பணியை, ஏன் இங்கு இருந்தே செய்யக்கூடாது...?

இந்த என் ஊரைச் சுற்றி முப்பது ஊர்கள் உள்ளன.

தங்களின் வருகையை நான் அவர்களுக்குத் தெரிவித்தால் போதும், அனைவரும் இங்கேயே வந்து விடுவார்கள். தாங்கள் ஊர் ஊராகச் சென்று ஆற்றும் பணியினை இங்கிருந்தே செய்யலாமே... இதில் எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை..." என்று கூறிய! குருவிற்கு, நேற்று அவர் பயணம் செய்தபோது, ஒதுங்க ஒரு நிழல் கூட இல்லாது அவதிப்பட்டது, அவர் நினைவில் வந்து சுட்டது.

நேற்று நாம் பட்ட துன்பத்தை வேறுயாரும் எதிர்காலத்தில் படக்கூடாது... இதற்கு வழியை இவர் சொல்வதுபோல் இங்கேயே சில காலம் தங்கி ஏன் செயல்படக்கூடாது. இப்படி அவர் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது...

"குருவே, தங்களின் மௌனத்தை சம்மதமாக எடுத்துக்கொண்டு, நான் செயல்படட்டுமா?" என்று கேட்டார் ஜமின்தார்.

மெலிதாக புன்னகை செய்த குருஜி, பின் "அன்பரே, உமது எண்ணப்படியே, இங்கே நான் தங்க வேண்டுமானால், சில நிபந்தனைகள் உள்ளன.

"எதுவாக இருந்தாலும் நான் செய்யக் காத்து இருக்கிறேன். கூறுங்கள்..." என்று மகிழ்ச்சியுடன் கூறினார் ஜமீன்தார்.

"தனியே, நான் தங்க ஒரு குடில் வேண்டும்... நான் பூஜை செய்ய தினமும் அன்றலர்ந்த மலர்கள் வேண்டும்.

அதற்குத் தேவையான மலர்ச் செடிகளையும், கொடிகளையும் நானே பயிர் செய்து வளர்க்க வேண்டும்.

அதற்கு ஏற்றார்போல் அந்தக் குடிலைச் சுற்றி பரந்த இடமும் வேண்டும்.

என்னைப் பார்க்க வரும் அன்பர்களுக்கு யோகாப் பயிற்றுவிக்க வேண்டும்.

அதற்கு ஏற்றாற்போல், குடிசைக்கு அருகிலேயே இடம் ஒதுக்க வேண்டும்...

எனக்கு வேண்டிய உணவினை நானே தயார் செய்து கொள்ள வேண்டும்... அதற்கு வேண்டிய ஏற்பாட்டினையும் செய்ய வேண்டும்... அப்படி அமைந்தால், நான் இங்கே தங்குவதற்கு தடை ஏதும் இல்லை..." என்று கூறியதும்...

"குருவே, இவ்வளவுதானே" என்று மகிழ்ச்சியோடு கூறி அவரை வணங்கிவிட்டு அங்கு இருந்து வெளியில் நடந்தார், ஜமீன்தார்.

இரண்டும் நாளில், குருஜி விரும்பியது போல எல்லா பணிகளையும் செய்து முடித்து விட்டார், ஜமீன்தார்.

ஆசிரமத்தின் திறப்பு விழாவன்று, அந்த ஊர் மக்கள் மட்டுமல்ல பக்கத்து ஊரில் உள்ளவர்களும் குவிந்து விட்டார்கள்.

ஒரே நேரத்தில், இவ்வளவு மக்கள் கூட்டத்தைக் கண்ட குருஜிக்கு மிகுந்த மகிழ்ச்சி, தன் மகிழ்ச்சியை ஜமிந்தாரரிடமும் கூற, அவர் பெரிதும் மகிழ்ந்து போனார்.

அந்த நிலையில் சபையின் ஓரம் நின்று ஜமின்தார், மக்களைப் பார்த்து பேசத் தொடங்கினார்...

"குருஜி பின் பாத கமலங்களுக்கு என் வணக்கத்தையும் நன்றியினையும் கூற கடமைப்பட்டியிருக்கிறேன்...

இனி குருஜி அவர்கள் நம்மோடுதான் இருக்கப் போகிறார்கள். இது நாம் செய்த பாக்கியமாகவே கருதுகிறேன்.

ஆசிரமத்தில் தினமும் நமக்கெல்லாம் ஆசி கூறி, சொற்பொழிவாற்றுவதாகவும், வாரத்தில் இரண்டு நாள் யோகப் பயிற்சியும் கற்றுத்தருவதாகக் கூறியிருக்கிறார்கள்.

அதில் நாம் கலந்துகொண்டு உடலையும், உள்ளத்தையும் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அன்போடு உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இனி குருஜி அவர்கள் நமக்கெல்லாம் ஆசி வழங்கி பேசுவார்கள்...

குருஜி அமர்ந்த நிலையில் பேசினார்.

"இனிய அன்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துகள்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் புனித வாழ்க்கையாக மாற வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் தன்னலம் கருதாமல், பிறர் நலன் கருதினாலே போதுமானது.

அப்படி ஒவ்வொருவரும் வாழ்ந்தால், உலகை உப்புக்கடல் சூழ்ந்து இருப்பதைப்போல, மனித வாழ்க்கையில் உவப்புக் கடலால் சூழப்படும்.

இறைவன், நாம் காணும் செடியிலும் இருக்கிறான், கொடியிலும், மரங்களிலும் இருக்கிறான் என்பதை முதலில் நாம் உணரவேண்டும்.

அப்படி நம் முன்னோர்கள் உணர்ந்ததால்தான், அவர்கள் மரங்களை தெய்வமாக வழிபட்டு வந்தார்கள், வருகிறார்கள்.

எந்த ஓர் உயிர்களுக்கும் நாம் நன்மை செய்யவேண்டும். முடிந்தால் நாம் பாதுகாக்க வேண்டும், என்று யார் ஒருவர் நினைக்கிறார்களோ - விரும்புகிறார்களோ அவர்கள் இறைவனைக் கண்டவராகிறார்கள்.

நானும் இறைவனைக்காண வேண்டும் என்று விரும்புகிறேன்...

நீங்களும் தெய்வத்தைக்காண விரும்புகிறீர்களா? என்று பக்தர்களைப் பார்த்துக் கேட்டார், குருஜி.

"நாங்களும் காணவிரும்புகிறோம்... நாங்களும் காண விரும்புகிறோம்..." என்று மகிழ்ச்சியோடு கூறினார்கள் பக்தர்கள்.

அப்படியானால், தற்போது நான் கொடுக்கும் இந்த பிரசாரத்தை நீங்கள் உங்கள் ஊர்களில் உள்ள சாலைகளின் ஓரம் பயன்படுத்துங்கள்..." என்றார், குருஜி.

இப்படி அவர் கொடுத்த 'பிரசாதங்கள்' இன்று சுற்றுப்புற கிராமங்களில் எல்லாம் ஒரு இலட்சம் மரங்களாக நின்று நிழல் கொடுப்பதோடு, வருணபகவானையும் அழைத்து நீராடிக் கொண்டு இருக்கின்றன.

குருஜி- பிரசாதமாகக் கொடுத்தது, மரம், செடி, கொடிகளின் விதைகளைத்தான் என்பதைக் கூறவும் வேண்டுமா!

10

‘மா’ மனிதர்...

பதினைந்து ஆண்டுகளுக்குப்பின், இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்று தன் சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தார், சேகர்.

படிக்கும் காலத்திலேயே இராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் இருந்தவர், சேகர்.

பெற்றோர் இருவரும் ஒரே ஆண்டில் அடுத்தடுத்து இறந்து போனார்கள்.

அதே ஆண்டில், சேகரின் பள்ளிப்படிப்பும் முடிந்ததால், வீட்டை தன் சித்தப்பாவிடம் பாதுகாப்பாக ஒப்படைத்து விட்டு, இராணுவத்தில் போய் சேர்ந்து விட்டார்...

பணியில் இருந்து வந்த சேகரிடம், பொறுப்போடு அது நாள் வரை பாதுகாத்து வந்த அவர் வீட்டை அவரிடமே ஒப்படைத்தார், அன்பான சித்தப்பா.

தனித்து அந்த வீட்டில் வாழ்ந்து வந்த இராணுவ வீரர் சேகரிடம், “தம்பி, இனியும் நீ தனியே இருக்க வேண்டாம்...

நம்ம சொந்தத்துல பல நல்ல பொண்ணுங்க இருக்கு... நீ சொன்னா கல்யாணத்துக்கு உடனே ஏற்பாடு செய்திடலாம். நீ என்னப்பா சொல்றே?” கேட்டார், சித்தப்பா.

“வேணாம் சித்தப்பா.... ஏதோ மீதி காலத்தையும் இப்படியே போக்கிடுறேன்... இது விசயமா இனி பேச வேணாம் சித்தப்பா...” என்று இறுதியாகவும், உறுதியாகவும் கூறி விட்டார்.

பணியில் இருந்தபோது உழைத்துக்கொண்டே இருந்தவருக்கு, காலையில் எழுந்ததும், கடன்களை முடித்து சமைப்பது, சாப்பிடுவது, செய்தித்தாள், தொலைக்காட்சிப் பார்ப்பது, மாலையானால், டவுனுக்குப் போவது, நூலகம் செல்வது என்று இருப்பது பிடிக்குமா, என்ன?...

அதனால், சேமித்து வைத்திருந்த பணத்தையெல்லாம் தன் சித்தப்பாவிடம் கொடுத்து, நல்ல நிலம் ஒன்றை வாங்கச் சொல்லி, அதில் கத்திரி, வெண்டை, கொத்தவரங்கா என்று பயிர் செய்து பாடு பட்டுக் கொண்டு இருந்தார், இராணுவ வீரர், சேகர்.

நன்றாக உழைத்துக்கொண்டு, உற்சாகமாக இருந்த அவருக்கு புற்றுநோய் எப்படியோ வந்துவிட்டது.

பெரிய அளவில் கவலைப் படாமல், அவ்வப்போது, மருத்துவ மனைக்குச் சென்று வந்தார்.

நோயைப் பற்றிக் கவலைப்படாமல், சிலஆட்களை வைத்து, தானும் அவர்களுடன் சென்று தோட்ட வேலைகளை கவனித்து வந்தார், சேகர்.

முடிந்த அளவில் பாடுபட்டு வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருந்தவருக்கு...

ஒரு நாள், நமக்குப்பின் என்ன? நாம் வாழ்ந்ததற்கு அடையாளமாக எதை வைத்துப் போகப்போகிறோம்? என்று சிந்தித்தார்...! நீண்ட நேர சிந்தனைக்குப்பின் ஒரு முடிவினை எடுத்தார். அந்த முடிவை, செயல்படுத்தவும்

தொடங்கினார்.

இனி நம்மால் தினமும் தோட்டத்திற்குச் சென்று பயிர்களைப் பார்த்துவர இயலாது... அதற்கு ஏற்ப நம் நிலத்தில் பயிர்களை வளர்க்க வேண்டும் என்று நினைத்தவர், தன் எண்ணத்தை என் சித்தப்பாவிடமும் சொன்னார்.

"நீ சொல்றதும் சரிதான் தம்பி... நீ எப்படி செய்யணுமுன்னு நினைக்கிறயோ, அப்படியே செய்திடலாம்..." என்றார், சித்தப்பா.

அதன்படியே ஒரே வாரத்தில் சேகர் நிலத்தில் பலவகை மரக்கன்றுகள் நடப்பட்டன.

அதை கவனிக்க ஒரு பணியாளையும் மாதச் சம்பளத்திற்குப் போடப்பட்டது.

ஆண்டுகள் ஐந்து ஆயிற்று!

சேகர் தோட்டத்தில் நட்ட மரங்கள் எல்லாம் செழுமையாக வளர்ந்து, பலன் கொடுக்கும் நிலையை அடைந்திருந்தது.

அதே நேரம், சேகரின் உடலில் தோன்றிய நோயும் வேகமாக பரவி வளர்ந்து இருந்தது.

மருத்துவர் வீட்டிற்கே வந்து சிகிச்சை அளித்துக் கொண்டு இருந்தார்...

ஒருநாள், "கேப்டன், உங்களுக்கு ஆசைகள் ஏதேனும் இருந்தால் அதை நீங்கள் நிறைவேற்றிக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக் கொண்டு இருந்த மருத்துவரிடம்

"டாக்டர், உங்கள் உயிர் எப்போது வேண்டுமானாலும் பிரியலாம்... என்றுதானே சொல்ல வந்தீர்கள்?

டாக்டர் என் உயிர்நிலையும் - உடல் நிலையையும் நான் நல்லா தெரிஞ்சதாலதான், என் சித்தப்பாவிடம் வக்கிலை அழைத்து வரச் சொல்லி இருக்கிறேன்..." என்று கூறிக்கொண்டு இருக்கும்போதே, வக்கிலோடு உள்ளே நுழைந்தார், சித்தப்பா.

“வணக்கம் டாக்டர், எப்ப வந்திங்க? தம்பிக்கு உடம்பு எப்படி இருக்கு?’கேட்டார்... சித்தப்பா.

டாக்டர் பதில் சொல்வதற்கு முன், “சித்தப்பா, உடம்பு நல்லா இருக்குதாம்.... என்று கூறி, “வாங்க வக்கில் சார், உட்காருங்க...” என்றார், சேகர்.

“கேப்டன், நான் புறப்படட்டுமா?” என்று கேட்டார், மருத்துவர்.

“என்ன டாக்டர், கடைசி நேரத்திலே நீங்களும் இருந்தா எனக்கு நல்லதுன்னு படுது...” என்றார், சேகர்.

“சரி, உங்கள் விருப்பப்படியே இருக்கிறேன்...” என்றார், டாக்டர்.

“வக்கீல் ஐயா, சித்தப்பா ஏதாவது சொன்னாங்களா?” கேட்டார், சேகர்..

“இல்லிங்க... நீங்க கூப்பிட்டதாக மட்டும் சொன்னார்...” என்றார், வக்கில்,

“அப்படியா... ரொம்ப நல்லது... வக்கில் ஐயா, என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும்.... என் வாழ்க்கைப் பயணத்தில் இறுதி நிலையில் தற்போது நான் இருக்கிறேன்.

அதனால ஓர் உயில் எழுதனும் அதுக்காகத்தான் உங்களை அழைச்சிகிட்டு வரச் சொன்னேன்.

“அப்படியா, சொல்லுங்க எழுதிடலாம்....” என்றார், வக்கில்.

சிறிது நேரம் கண்களை மூடி சிந்தித்தவர்...

“வக்கீல் ஐயா, உயிலில் என்ன எழுதனுங்கிறதை நான் உங்க கிட்டே சொல்லிடுறேன்... அப்புறம் அதை

எழுதிடுங்க....” என்றார், சேகர்.

“சரி அப்படியே செய்திடலாம்... சொல்லுங்க” என்றார், வக்கீல்.

“என்னோட அம்மா, அப்பா பெயருலே ஒரு அறக்கட்டளை அமைக்கனும். எனக்குச் சொந்தமான இந்த வீடு. இந்த ஊரில் உள்ள இரண்டு ஏக்கர் நிலத்திலுள்ள பழமரங்களின் வருவாய் எல்லாம் இந்த என் கிராமத்தில் உள்ள ஏழை எளியோர்களின் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், மாற்றுத் திறனாளிகளாக இருப்பவர்களுக்கும் பயன்படுத்த வேண்டும். இந்த அறக்கட்டளையின் தலைவராக என் சித்தா இருந்து செயல்பட வேண்டும்... அவ்வளவுதான்... சார்...” என்றார், இராணுவ வீரர் சேகர்.

“சரி சார். அப்படியே எழுதிடுறேன்...” என்றார், வக்கில்.

“என்ன சித்தப்பா... நான் சொன்னது சரிதானேப்பா...” என்று கேட்டார், சேகர்.

“எல்லாம் உன் விருப்பம்தானப்பா... வக்கில் ஐயா, தம்பி சொன்னதுபோல எழுதிடுங்க? நான் சொல்றது சரிதானுங்களே டாக்டர்.?”

“கேப்டன், ரொம்ப நல்லாவே சிந்தித்திருக்கிறார்... அவர் சொன்னது போலவே எழுதிடலாம்...” என்றார், டாக்டரும்...

வக்கில் உயிலை எழுதத் தொடங்கினார்.

அதைப் பார்த்து விட்டு கண்களை மூடி படுத்திருந்தார், சேகர்.

“உயிலை எழுதிய வக்கில், “மிலிட்டிரிசார்... உயிலைப் படிக்கட்டுமா? கேட்டார்.. இரண்டு முறை அழைத்தும்

அவர் கண்களைத் திறக்கவில்லை.

அதைக்கண்ட டாக்டர்... "சார், கேப்டன் சார்..." என்று அவரைத் தொட்டு எழுப்பியும் எழாததால், அவர் நாடியைப் பார்த்தார்.... அப்படியே பிரமித்துப்போய்.. அங்கு நின்று இருந்த இருவரையும் சோகத்தோடு பார்த்தார்.

"டாக்டர் ஐயா..., "என்ன ஆச்சு?" கேட்டார், கவலையோடு, சித்தப்பா."

" கேப்டன் நம்மை எல்லாம் விட்டுப்போய் விட்டார்..."

"மகனே... மகனே" கதறி அழுதார்... சித்தப்பா...

கதறலைக் கேட்டு, ஊர் கூடி விட்டது...

மரங்களை நட்டு, எங்களின் மனங்களைத் தொட்ட மாமனிதரே என்று ஊர் மக்கள் கதறி அழுதார்கள்!

11

பூவரசமரமும் பூஞ்சிட்டுக் குருவிகளும்...!

"**அ**த்தான், எப்படியும் இதையும் கொண்டு போயிடுலாங்க! இதவுட்டுட்டு என்னால வரமுடியாதுங்க...." என்று சொல்லும்போதே என் மனைவி நீலாவின் கண்கள் கலங்கின.

என்னடி விளையாடுறீயா? ஆடா, மாடா,

ஓட்டிக்கிட்டுப் போறதுக்கு? கோழியா,

வாத்தா தூக்கி கிட்டுப் போறதுக்கு?

கடையிலே இருக்கிற உப்பா, புளியா காசு

கொடுத்து வாங்கிக்கிட்டுப் போறதுக்கு?

ஒரு வருஷம் ரெண்டு வருஷமில்ல ஒன்பது வருஷம் வளர்ந்து நிக்கிற மரம், பூவரசம் மரம் எப்படி, சிந்திச்சுப் பாரு...

வீட்டுக்காரரோ, இன்னும் ஒருவாரத்துல வீட்டைடைக்காலி செய்யணுமுன்னு சொல்றாரு...

மனைவியின் அறியாமையை எண்ணிப்பேசுவதாக நினைத்து படபடவென்று பேசினேன்.

அவள் அழகாக எங்கள் வீட்டின் எதிரே நின்றிருந்த மஞ்

சள் பூ பூத்த, பச்சை பசேலென்ற இலைகளோடு இருந்த அந்த பூவரசன் மரத்தையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

அந்த பூவரசன் மரத்தின் மீது அவள் வைத்து இருக்கும் பாசத்திற்கு காரணம் இல்லாமல் இல்லை.

எனக்கு ஒரு பத்திரிகையில் வேலை கிடைத்து

நான் மட்டும் சென்னை வந்து, ஒரு மாதம் நண்பர்கள் அறையில் மாற்றி மாற்றி இரவுகளை கழித்து பின் வீடு பார்த்து இப்போது சூளைமேட்டில் உள்ள இந்த வீட்டிற்கு என் மனைவியை ஊரில் இருந்து அழைத்து வ்ந்தேன்.

அந்த வீட்டுக்கார அம்மாள் அந்தக் காலத்தில் எப்படியோ மாடு கன்றுகளை வைத்து பால் கறந்து இந்த இரண்டு கிரௌண்டு நிலத்தை வாங்கிப்போட்டு, அதில் நீளவாக்கில் பாதிமனையில் ஐந்து வீடுகளை வரிசையாகக் கட்டி, மேலே ஐந்து வீடுகளையும் கட்டிப்போட்டு விட்டு மீதி இடத்தில் மாடுகளைக் கட்டிப்போட்டு இருந்தார்.

அவருக்கு ஒரே பெண் என்பதால் வீட்டோடு மாப்பிள்ளை இருந்தார்.

ஏதோ நானும் வேலைக்குப் போகிறேன் என்ற ரீதியில் அவர் ஓர் அச்சகத்தில் மிஷின் மேனாக இருந்தார்.

என்ன நோயோ, என்ன காலமோ ஒரே மாதத்தில் மாடுகள், கன்றுகள் எல்லாம் இறந்து போயின.

வீடு கட்ட வாங்கிய கடன், கல்யாணத்திற்கு வாங்கிய கடன் எல்லாம் சூழ்ந்து கொள்ள, "வீட்டை விற்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை வந்ததும் -

வீட்டை ஒரு முஸ்லிம்மிற்கு விற்றுவிட்டு, கடன்போக மீதித் தொகையில் ஒரு சின்ன வீடாக வாங்கிக்கொண்டு பக்கத்துத் தெருவிற்குப் போய்விட்டார்கள்.

வீட்டை வாங்கியவருக்கு சென்னையில் நூறு வீடுகளுக்கு மேல் இருந்தது.

அவர் இருந்ததோ எழும்பூரில், வாடகையில் இருந்த எங்கள் யாருக்கும் வீட்டுக்காரர் தொல்லை இல்லை.

மாதம் ஒரு முறை வீட்டுக்காரரோ, அவர் ஆட்கள் யாராவதோ வருவார்கள். வாடகை வாங்கிப் போவார்கள்.

இந்த நிலையில்தான் மாடுகள் கட்டியிருந்த கீற்று கொட்டகை இல்லாது வீட்டின் எதிரே இருந்த காலி இடம் வெறுமனே கிடந்தது.

அதனால், வெயில் நேரங்களில் வீட்டிற்குள்ளும் வெப்பம் தாக்கத் தொடங்கியது.

அந்த வேளையில் அடுத்த வீட்டிலிருந்த பூவரசம் மரத்தை வீட்டிற்குக் கீழே வேர்கள் போய், வீட்டிற்கு சேதம் வந்து விடுமோ என்பதால் வெட்டினார்கள்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த என் கிராமத்து மனைவி, "அத்தான், அடுத்த வீட்டுல வெட்ற மரத்துல ஒரு கிளையை வாங்கி வந்து நம்ம வீட்டுக்கு முன்னால நட்டா நமக்கு நல்ல நிழல் கொடுக்கும்" என்று சொன்னாள்.

இதோ பாரு நாம இருக்கிறதோ வாடகை வீடு எப்ப வீட்டுக்காரர் காலி பண்ணச் சொல்றாரோ அப்ப போறவங்க நாம...

நீ அந்த கிளையை நட்டு, அது வளர்ந்து எப்ப நிழல் கொடுக்கிறது? என்று கேட்டு

அவள் ஆசையை நான் ஒடித்துப் போடாமல் அதை நட்டு ஆடு, மாடு மேயாம தண்ணி ஊத்தி காப்பாத்துறதா இருந்தா செய்.... என்றேன்.

அவ்வளவுதான், அடுத்த வீட்டுக்காரர்களிடம் சென்றாள்.. கை மொத்தத்தில் ஒரு பூவரசம் கிளையை வாங்கி வந்தாள்...

எங்கிருந்தோ கொஞ்சம் பசும் சாணத்தை வாங்கி வந்தாள். அந்தக் கிளையின் வெட்டுப் பகுதியில் பூசினாள்..

எதிர் வீட்டிற்குச் சென்று கடப்பாறையை வாங்கி வந்தாள், குழி தோண்டினாள், முதலில் அதில் நீர் ஊற்றினாள்.

சிறிது நேரத்தில் அந்தக் கிளையை அதில் ஊன்றி நன்றாக இடித்து நட்டாள்.

பிறகு அதைச் சுற்றி பாத்திபோல் கட்டி அது நிறைய கிணற்று நீரை ஊற்றிவிட்டு, தனக்குள்ளே சிரித்தபடியே என்னிடம் வந்தாள்.

இன்னும் ஒரு வாரத்தில் மரம் முளைச்சிடும்.

அப்புறம் மரமா வளர்ந்திடும்; அப்புறம் நிழலோ நிழல்தான்! என்றாள்.

ஆமாம்... அவன் சொன்னது போலவே இன்று எங்கள் வீட்டு வாசப்படி அளவிற்கு நீண்டு வளர்ந்து நிழல் தந்து கொண்டிருக்கிறது.

இப்போது இந்த மரம் மட்டும் அவனுக்குப் பிரச்சனை இல்லை. இரண்டு மூன்று ஆண்டுகளில் பல கிளைகள் விட்டு வளர்ந்த இந்த மரத்தில் காலை ஐந்து மணி என்றால் எங்கு இருந்துதான் அந்தச் சிட்டுக்குருவிகள் எல்லாம் வருமோ?

'கீச்கீச்' சென்ற ஒலியோடு ஒன்றை ஒன்று தாவிப் பிடிப்பதும், உல்லாசமாக இலைகளின் கிளைகளின் ஊடே அவை விளையாடுவதைக் கண்டு காலையில் கோலம் போடுகையில் அவைகளைப் பார்த்தபடியே மெய்மறந்து நின்று விடுவாள். சில வேளைகளில் அவைகளை நானும் பார்ப்பதுண்டு.

இப்படியே அந்த குருவிகளோடு மனதால் பழகியவள்,

கல் மாவினால் தினமும் கோலம் போட்டவள், பின் பச்சரிசியை அரைத்து அதைக் கொண்டு கோலம் போட்டு விட்டு, வீட்டிற்குள் வந்து ஜன்னல் ஓரம் நின்று கொண்டு, அந்த குருவிகள் கோலமாவைக் கொத்தித் தின்னும் அழகைப் பார்ப்பாள்.

காலையில் வரத் தொடங்கிய குருவிகள் பிறகு மதியமும், மாலையும் வரத் தொடங்கின.

அப்போதெல்லாம் ரேஷன் கடையில் வாங்கி வரும் அரிசியில் நெல்லும், நொய்யும் தானே அதிகம்!

அதை எல்லாம் எடுத்து ஒரு டப்பாவில் போட்டு சேர்க்கத் தொடங்கினாள்.

ஒவ்வொரு வேளைக்கும் ஒரு பிடி எடுத்து மரத்திற்குக் கீழே போட்டுவிட்டு அவைகள் தின்று முடிக்கும் வரை பார்த்துக் கொண்டு இருப்பதோடு ஒரு கொட்டாங்குச்சியில் தண்ணீரையும் கொண்டு போய் வைப்பாள். இப்படி அந்த மரம், சிட்டுக் குருவிகளுக்கு மட்டும் புகலிடமாக இல்லை.

வெயில் நேரத்தில் காக்கைகள் சிலவும் வரத் தொடங்கின.

அதில் ஒரு ஜோடி காக்கைகள், திருக்கழுக்குன்றத்தில் மதியம் கோயில் பிரசாதத்தைத் தின்ன கழுகுகள் வருமே அதேபோல் சரியாக மதியம் இரண்டு மணிக்கு வரும்.

அவைகள் வந்து அந்த மரத்தில் அமரும்போது நானே கடிகாரத்தைப் பார்த்து இருக்கிறேன்.

சரியாக மணி இரண்டாக இருக்கும் அல்லது இரண்டு ஐந்தாகவோ, ஒண்ணு ஐம்பத்தி ஐந்தாகவோ இருக்கும்.

அப்போதெல்லாம் என் மனைவியிடம் நான் சொல்வேன்.... ஏய் சனீஸ்வரர் வந்திருக்கிறார்.

போய் கவனி என்பேன்.

அவளும் ஒரு கிண்ணத்தில் சோறும், தம்ளரில் தண்ணீ. ரோடும் போவாள்.

முதலில் அவள் சோற்றை வைத்து விட்டு விலகி வந்தால்தான் கீழே வந்து தின்னும்...

காலப்போக்கில் பழகிவிட்டதால் இப்போதெல்லாம் அவள் தட்டை நீட்டிக் கொண்டு இருக்க எந்த பயமும் இல்லாது இயல்பாய் கொத்தித் தின்னுத் தொடங்கின.

சமீபத்தில் சென்னையில் தொடர்ந்து பத்து நாள்களாக பெய்த மழையில் - புயல் காற்றில் இருக்க வீடின்றி அடித்துக்கொண்டு போகின்ற நிலையில் இருந்தபோது...

"அத்தான், புயல் காத்து இங்கெல்லாம் அடிக்காது தானே?" என்றாள்.

நான் ஏன்? என்றேன்

"இல்ல, இங்கே புயலடிச்சா நம்ம பூவரசமரம் விழுந்துடுமே. குருவி எல்லாம் தவிக்குமே... அதான் கேட்டேன்..." என்றாளே பார்க்கலாம்.

எனக்கு அழுவதா, அவளை அடிப்பதா, சிரிப்பதா என்றே புரியவில்லை.

பாண்டிச்சேரியில் கோடிக்கணக்கில் சேதம், தஞ்சையில் பல ஏக்கர் நெற்பயிர் வெள்ளத்தில் மூழ்கி கிடக்கிறது.

கடலூர், விழுப்புரம் பஸ் போக்குவரத்துத் துண்டிப்பு, உயிர் சேதம் இதுவரை தமிழகத்தில் எழுபத்து ஒன்று... இப்படி வானொலியிலும், டிவியிலும் பத்திரிகைகளிலும் செய்திகள் வந்து கொண்டு இருக்கும்போது, இவள் மனது இந்தப் பூவரசன் மரத்தில்... குருவிகளிடத்தில்...

எப்படி இது... அதை நானே நட்டு தினமும் அதைப் பார்த்துப் பார்த்து... நீர் விட்டு வளர்த்ததால் இருக்குமோ...? இந்தப் பாசம். ?

ஒருநாள் என் மகள் நிலா அந்த மரத்தில் (சைக்கிள் டயரைப் போட்டு) "ஊஞ்சல் கட்டித்தாம்மா..." என்று கேட்டாள்.

“ஏய், நீ அதுல உட்காந்து ஆடக்கூடாது.. அதுக்கு வலிக்கும்.... அது உனக்கு அக்கா..

ஆமாம், நீ பொறக்குறதுக்கு ரெண்டு வருஷத்துக்கு முன்னாடிதான் இதை நட்டேன்...” என்றாள் குழந்தையிடம்.

“அப்பா... அம்மாவுக்கு ஒண்ணுமே தெரியிலே... மரத்துக்கு வலிக்குமாம்... மரம் எனக்கு அக்காவாம்...! எனக்கு அக்கா வாணிதானே...” என்றபடியே எதிர் வீட்டிற்கு விளையாட ஓடினாள்.

தன் குழந்தைகளுக்கு மேலாக, அந்த மரத்தின் மீது வைத்த பாசமா இருக்குமோ?

“ஏய் நீலா இப்படியே உட்காந்து இருந்தா எப்படி? என்று அவள் தோளைத் தொட்டேன்.

விழிப்பு கொண்டவளாய், “என்னாங்க” என்றாள்.

உனக்கு இந்த மரம்தானே வேணும்?

“ஆமாங்க...”

சரி ஏற்பாடு செய்றேன்... என்றேன்.

“எப்படிங்க..? ஆவலாய் கேட்டாள்.

என் சிந்தனைக்கு வேலை கொடுத்தேன். முடிவில்...

இதோ பாரு.. இதே போல வீட்டுக்கு முன்னால காலியிடமா உள்ள வீடா பார்ப்போம்.... இங்கிருந்து போகும்போது இந்த மரத்திலே இருந்து ஒரு கிளையை வெட்டி எடுத்துக் கிட்டுப்போய் அங்கே நடுவோம்... அது வளரும்... அப்புறம் இதே போல நிழல் கொடுக்கும்... குருவி வரும். காக்கா வரும்.

“வேண்டாங்க... இனிமே - மேலே எதுவும் நீங்க சொல்லாதீங்க. நான் வளர்த்த இந்த பச்சைக் குழந்தைய நானே வெட்டுறதா? வேணாங்க... அது என்னாலே முடியாதுங்க...” என்றவள். அழத் தொடங்கினாள்.

நான் மரமாய் நின்றேன்...!

12

மரம் நட விரும்பு

நானும், நிலவனும் கல்லூரி நண்பர்கள்.

இன்று இருவருமே நல்ல வேலையில் இருக்கிறோம்.

இந்த நிலையில்தான், நிலவனின் தந்தை அவன் ஊரில் ஒரு வீட்டை புதிதாகக் கட்டி புதுமனை புகுவிழா ஏற்பாடு செய்து இருந்தார்.

அதற்காகத்தான் நிலவன் என்னை அழைத்திருந்தான், நானும் வந்தேன். புதுமனை புகுவிழா மிகச் சிறப்பாக நடந்தேறியதும், நான் ஊருக்குப் புறப்பட்டேன்.

"நாளைக்கு லீவு தானேடா, — போய் என்னசெய்யப்போறே...?" இரண்டு நாள் என்னோடு இரு... என் ஊரைச் சுற்றிப் பார்க்கலாம்..."

"அதுவும் சரிதான்...."

நிலவன் அவன் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அவன் அப்பா அந்த ஊரில் பெரிய துணிக்கடை வைத்திருக்கிறார். கடையில் இருபதுபேர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள்.

அதனால், நிலவனுக்கு கைப்பட்ட செல்வம் - செல்லம்.

இருவரும் காலைச் சிற்றுண்டியை முடித்து, நிலவனின்

வீட்டிற்கு எதிரே இருந்த பேப்பர் கடைக்குச் சென்றார்கள். காலை பேப்பரில் இரண்டை வாங்கிக் கொண்டு எதிரே இருந்த மருத்துவமனை வளாகத்தில் அமர்ந்தார்கள்.

ஆளுக்கொரு பேப்பரை படித்துக்கொண்டு இருந்தார்கள். அந்த வேளையில்தான், பத்து பிளாஸ்டிக் குடங்களில் தண்ணீரை ஏற்றிக் கொண்டு, அதை தன் கையால் இழுத்துக் கொண்டு ஒரு எண்பது வயது முதியவர் வந்தார்.

வளாகத்தில் நின்று கொண்டு இருந்தவர்கள், அவரைப் பார்த்து மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

நிலவா, அங்கே பாரு என்றேன்...

“எதையடா?”

தண்ணீர் குடங்களை ஏற்றி இழுத்துக் கொண்டு வருகிறாறே அவரையா?

ஆமாம்....! என்றேன்....

“இந்த ஊருக்கே பெருமை சேர்த்துக்கொண்டு இருக்கும் மனிதர் இல்லை மாமனிதர்..”

“நீ என்னடா சொல்றே? என்று கேட்டேன்.

“ஆமாண்டா... ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் இவர், இப்ப நம்ம தலைக்கு மேலே நின்று நிழல் கொடுத்துக் கொண்டு இருக்கிற மரத்தின் பெயர் என்ன தெரியுமா?.. கேட்டான், நிலவன்.

என்னடா சின்னப் பசங்க கிட்டே கேட்கிறதுபோ கேட்கிறே...?

“இல்ல, சொல்லுடா...” என்றான், நிலவன்.

இது நாவல்... மரம்... என்றேன்.

“இப்படி நாவல் மரம், நெல்லி மரம், வாகை மரம், வேப்பமரம்... இப்படி இந்த வளாகம் முழுதும் நூற்றுக்கு மேற்பட்ட மரங்கள் வளர்வதற்கும், இங்கே வருகின்ற

எல்லோருக்கும் நிழல் தருவதற்கும் காரணமாக இருப்பவர் இந்தத்தாத்தாதான்....” என்றான், நிலவன்.

நான் வியப்போடு, நீ என்னடா சொல்றே? கேட்டேன்.

“அதோ பார்...” என்று நிலவன் காட்டிய திசையில் பார்த்தேன்....

அங்கே, அந்தத் தாத்தா, தான் வண்டியில் ஏற்றி வந்த தண்ணீரை ஒவ்வொரு மரத்திற்கும் ஊற்றிக் கொண்டு இருந்தார்.

தண்ணீரை ஊற்றியதும் மரத்தை அப்படியே தழுவிக் கொண்டு சிறிது நேரம் இருந்து விட்டு அடுத்த மரத்திற்கு சென்றார்.

அங்கும், மரத்திற்குத் தண்ணீர் ஊற்றியது, மரத்தைத் தழுவி நின்றார்.

அதைக் கண்ட நான், ஏன் இப்படி செய்கிறார் என்று நிலவனிடம் கேட்டேன்.

“பால் கொடுக்கும் தாய் மார்கள் பிள்ளைக்குப் பால் கொடுத்து முடித்ததும், எப்படி பிள்ளையைத் தடவிக் கொடுப்பார்களோ, அதைப்போல், தண்ணீர் விட்டதும் பாசத்தோடு தடவிக்கொடுக்கிறார்..” என்று நண்பன் சொன்னதும், நான் வியப்போடு தாத்தாவை, தாயாகப் பார்த்தேன்.

உண்மையிலேயே, நீ தாத்தாவைப் பற்றி சொன்னது உண்மைதாண்டா.... அதுசரி சிலருக்குக் குடும்பம் இருக்கிறதா? கேட்டேன்.

“ஒரே பிள்ளைதான். மனைவி இல்லை..”

அப்படியா?

தாத்தாவுக்கு சொந்த பந்தம் எல்லாம் மரங்கள்தான்.

இவர் மகன் ஆசிரியராக வெளியூரில் குடும்பத்தோடு இருக்கிறார். மகன், இவரின் செலவுக்காக மாதம் இரண்டாயிரம் ரூபாய் அனுப்புவதை வைத்து -

விதை, மர்க்கன்றுகள் வாங்கியதுபோக, மீதி பணத்தில் சாப்பிடுகிறார்... என்ன சாப்பிடுகிறார் தெரியுமா?

காலை கூழ். மதியம் கூழ்.. இரவு? அப்போதும் கூழ்தான்.

பன்னிரெண்டு ஆண்டுகளாக ஆயிரத்திற்கு மேல் மரக்கன்றுகளை நட்டு, வளர்த்து பாதுகாத்து வருகிறார்..." என்றான், நிலவன்.

இந்த வயதில் ஏன் இந்த வேலை? என்று நான் கேட்டேன்.

"நீ நினைத்ததுபோல் நானும் முதலில் அப்படித்தான் நினைத்தேன் - ஒரு நாள் நினைத்ததை அவரிடமே கேட்டு விட்டேன்...

அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?

வறுமையில் அப்போது என் குடும்பம் இருந்தது. அப்போது சரியாக வேலையும் கிடைக்கவில்லை. நான், என் மனைவி, எங்கள் ஒரே குழந்தை... மூவரும் சாப்பிடவேண்டும். பிள்ளையை நன்கு படிக்க வைக்க வேண்டும்.

அதனால், மரங்களை வெட்டி அதில் வரும் பணத்தில், குடும்பம் நடத்திக்கொண்டு இருந்தேன்...

ஒரு மரத்தில் ஆயிரக்கணக்கான எறும்புகள் வாழ்கின்ற, பல நூறு பறவைகள் வந்து போகும், சில கூடும் கட்டும்.

மரங்கள் எல்லா உயிர்களுக்கும் நிழல், மழை தருகின்றன,

என்பதை உணர்ந்த நான், முன் மரம் வெட்டிய தவறுக்கு பிராயசித்தம் தேடி, பல ஆண்டுகளாக, சாலை ஓரம், பள்ளி, அரசு அலுவலக காலி இடங்களில் எல்லாம் மரக்கன்றுகளை நட்டு வருகிறேன்.

மேலும், என் ஊரைச் சுற்றியுள்ள சில கிராமங்களிலும் ஆலம், அரசு, வேம்பு, இலுப்பை என்று பல மரங்களை நட்டு வருகிறேன்...என்று சொன்னதைக் கேட்டதும்தான்,

இப்போது என் அப்பா வீடு கட்டத்தொடங்கியதும் - அப்பா வீட்டிற்கு முன்பும் - பின்பும் காலி இடங்கள் அதிகம் இருப்பது போல் கட்டுங்கள் என்றேன்.

அதைக் கேட்டதும், நீ ஏன் அப்படி சொல்றே, பேட்மிட்டன் ஆடப்போறீயா? இல்லை கிரிக்கெட் விளையாடப் போறீயா? என்று சிரித்தபடியே கேட்டார்.

"அதுக்கு இல்லப்பா.... அந்த இடங்களில் பழமரங்களையும், மூலிகைச் செடி, கொடிகளையும் வளர்க்கத்தானப்பா... என்றேன்.

என்னை வியப்போடும், மகிழ்ச்சியோடும் பார்த்த அப்பா, "எனக்குக்கூட இந்த நல்ல சிந்தனை வராமல் போயிடுச்சே... உன் விருப்பப்படியே செய்றேன்..." என்று சொன்னதோடு, அதன்படியே செய்யவும் செய்தார்.

வீட்டுக்கு முன்னே சின்னச் சின்ன மரக்கன்றுகளை நட்டு இருக்கேனே நீ பார்க்கலியா?" கேட்டான், நிலவன்.

பார்த்தேண்டா, அப்பர் அது எனக்கு ஒரு பெரிய விசயமா தெரியிலே... இப்பதான் புரியுது... கிரேட்டோ... கிரேட்டோ?
எனக்கு குருயார் தெரியுமா?" கேட்டான்.

ஔவைப்பாட்டி, 'அறம் செய்ய விரும்பு' என்றார். இந்த கருப்பையா தாத்தாவோ, 'மரம் நட விரும்பு' என்று, உனக்கு சொல்லாமல் சொல்லி இருக்கிறார், என்பதை நான்வேறு சொல்லவேண்டுமா? என்றேன்.

இங்கே, நிறைவு பெற்றது - கலாமின் கனவுகளின் ஒன்று!

இவனைப் பாராட்டுகிறேன்...
இந்தக் கவிஞன் விரைந்து எழுதக் கூடியவன்.
வீணான எழுத்துக்களை ஒருபோதும் எழுதாதவன்.
செய்திகளைத் தேடுவதில் என்னைப் போலவே பொழுதுக்கும் காலத்தைப் பயன்படுத்தக் கூடியவன். அதனால், 'செய்திகள் சேகரிப்பு சிங்கம்' என்ற பட்டத்தை இவனுக்குத் தந்து மகிழ்ச்சி அடைகிறேன்.
இவன் செய்திகளை சேகரிக்கும் செய்தியாளன் மட்டுமல்ல, சீரிய கவிஞன். அருமையான பத் திரிகையாளன். அற்புதமான எழுத் தாளன் (அதிலும் குழந்தைகளுக்காக எழுதுவதில் வல்லவன்).
குறளை எழுதிய ஆள்மீது பற்று வைக்காமல் நூல் மீது பற்று வைத்தவன். இவன், ஆள் மாறிவிடுவான். அவன் எழுதிய நூல் மாறாது என்பதை உணர்ந்து பெயர் வைத்துக்கொண்ட இவனைப் பாராட்டுகிறேன்.

- உவமைக்கவிஞர் சுரதா

சாதனா
பப்ளிகேஷன்